38 29-8-49- 6000 copies

38/ப

# ஸ்ரீ மீனாக்ஷி

# தமிழ் வாசகம்

## மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6-OCT 1949
MADRAS



நா. கனகராஜ ஐயர்

TB
031,3
N49
136339

# மீனாக்ஷி தமிழ் வாசகம்

## மூன்றாம் புத்தகம்


புதுக்கோட்டை மகாராஜா கல்லூரித் தமிழ்ப் பண்டிதர்

**வித்துவான், நா. கனகராஜ ஐயர்** B. O. L.,

இயற்றியது



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - OCT 1949
MADRAS



பிரசுரகர்த்தர்:

**வி. சூ. சுவாமிநாதன்**

மதுரை :: திருநெல்வேலி



பதிப்புரிமை]


[விலை 0-5-3

20th Reprint—Aug. 1949—(6000 Copies) Code word—M-

சென்னை-600 008.
136339

## கடவுள் துதி.

("கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்ற பாடலின் சந்தம்)

கல்விகற்கும் ஆசையுள்ளோர் கருதுகின்ற கருத்தே!
கலக்கமறச் சிறுவருக்குக் கருணைபொழி முகிலே!

செல்வமுடன் அடியவர்க்குச் சிறப்பருளும் சிறப்பே!
சிந்தையுற நினைப்பவருக்குத் திறமுதவும் திறமே!

பல்விதத்தும் நன்மையுறப் பாலிக்கும்தற் பரமே!
பாடுகின்ற பாடல்களின் பதப்பொருளாம் பொருளே!

அல்வழியிற் போகவிடா தாண்டருளும் குருவே!
ஆண்டவ எம் துதியினையும் அன்புடன் ஏற் றருளே.

29 Barathi Press—Mathurai.

# முகவுரை

நம் தமிழ் நாட்டில் அநேக தமிழ் வாசகப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆயினும் கற்பிக்கவேண்டிய முறைப்படி, இதுவரை வெளிவந்துள்ள புத்தகங்களில் இல்லாத சில புதிய பாடங்களுடன், **மீனுக்ஷி தமிழ் வாசகம்** என்னும் வாசக வரிசையை வெளியிடத் துணிந்துள்ளேன். அவற்றுள் முதல் இரண்டு புத்தகங்கள் ஏற்கனவே வெளிவந்து, அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்டுப் பாடசாலைகளிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இம்மூன்ருவது புத்தகத்தையும் பாடசாலை அதிகாரிகள் உபயோகப்படுத்தி எனக்கு ஊக்கமளிப்பார்கள் என்ற துணிவுடன் வெளியிடுகிறேன். இப்புத்தகத்துள் **சுகாதாரம், படப் பழக்கம், போக்குவரவு** முதலிய பாடங்கள், புதிதாய்ச் சேர்க்கப் பட்டுள்ளன.

இப்புத்தகத்தைப் பிரசுரிக்குமாறு எனக்கு அனுமதி தந்த இதன் ஆசிரியர் **ஸ்ரீமான் வித்துவான் நா. கனகராஜ ஐயர்** அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். மற்றும் இப்புத்தகம் வெளிவருவதற்கு மிகவும் உதவி புரிந்த கனவான்களுக்கும், இதனைப் பாடப் புத்தகமாக உபயோகிக்கும் பாடசாலை அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

**வி. சு. சுவாமிநாதன்**

# பொருளடக்கம்


| வரிசை | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வணங்கத்தக்கவர் | ... | 5 |
| 2. | கரடியும் இரண்டு சிநேகிதர்களும் | ... | 7 |
| 3. | எருதுகள் | ... | 9 |
| 4. | வெண்ணிலா | ... | 13 |
| 5. | சிங்கம் | ... | 14 |
| 6. | சிங்கமும் ஆடும் | ... | 17 |
| 7. | மழை | ... | 22 |
| 8. | கோழி | ... | 26 |
| 9. | பையனும் பிரபுவும் | ... | 29 |
| 10. | நமது தேகம் | ... | 33 |
| 11. | ஆலமரம் | ... | 36 |
| 12. | மகாத்மா காந்தி | ... | 38 |
| 13. | கந்தைத் துணியின் கதை | ... | 43 |
| 14. | சிபிச் சக்கரவர்த்தி | ... | 45 |
| 15. | நெல் வயல் | ... | 47 |
| 16. | போலீஸ்காரன் | ... | 51 |
| 17. | கல்விப் பெருமை | ... | 53 |
| 18. | காகிதம் | ... | 55 |
| 19. | குருபக்தி | ... | 57 |
| 20. | நமது தலைநகர் | ... | 60 |
| 21. | புதையல் | ... | 63 |
| 22. | குரங்கும் ஆடும் | ... | 66 |
| 23. | அம்மை குத்துவது ஏன்? | ... | 68 |
| 24. | பூமி, சூரியன், சந்திரன் | ... | 72 |
| 25. | கடவுள் வணக்கம் | ... | 75 |
| 26. | போக்கு வரவு—I | ... | 78 |
| 27. | போக்கு வரவு—II | ... | 80 |
| 28. | கிராமப் பஞ்சாயத்து | ... | 82 |
| 29. | கடிதம் எழுதும் முறை | ... | 85 |
| 30. | உபகாரம் வீண் போகாது | ... | 88 |
| 31. | படப் பழக்கம்—I | ... | 92 |
| 32. | படப் பழக்கம்—II | ... | 93 |
| 33. | கொன்றை வேந்தன் | ... | 94 |

ஸ்ரீ

# தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்



## 1. வணங்கத் தக்கவர்

தாய், தந்தை, குரு, தெய்வம், அரசன், பெரியோர் முதலியவர்களே நாம் வணங்கத் தக்கவர்கள். இவர்களை வணங்காவிட்டால் நாம் செய்ய வேண்டிய முக்கியமான கடமையை மறந்தவர்

ஆவோம். ஏனெனில் இவர்கள் நமக்குச் செய்யும் உபகாரம் அளவில்லாதது.

தாய்:—நம்மைப் பத்துமாதம் சுமந்து பெற்றவர். பாலூட்டி, தாலாட்டி, சீராட்டிப் பாராட்டியவர். சிறுவயதில் நாம் நோய் இல்லாமல் வளர, தான் மருந்து உண்டவர். நம்மிடம் மிகவும் அன்பு உள்ளவர். தாயே மேலான தெய்வம்.

தந்தை:—நமக்கு உணவும் உடையும் தந்து காப்பாற்றுபவர். விளையாட்டுப்பொருள்களும் புத்தகங்களும் தருபவர். துஷ்டருடைய சிநேகம் துன்பம் தருமென்று கூறி, நல்ல பிள்ளை ஆக வழி சொல்பவரும் இவரே. நாம் நன்ருய்ப் படித்து மேன்மை அடைய விரும்புபவர். தாயும் தந்தையும் நாம் காணும் தெய்வங்கள்.

குரு:—இளமைப் பருவத்தில் நமக்குத் தினந்தோறும் கல்வியை நயத்திலும் பயத்திலும் போதிப்பவர் இவரே. பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது, துஷ்டப் பிள்ளைகளுடன் சேராமல் கண்டிப்பவர். கல்விக்கும் மேலான நல்லொழுக்கத்தையும், நல்ல குணத்தையும் நம்மிடம் உண்டாக்குபவர். குருவை வணங்கு.

தெய்வம்:—நம்மைப் படைத்தவர் கடவுள். நாம் காணும் எல்லாப் பொருள்களையும் உண்

டாக்கியவரும் அவரே. இவ்வுலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளேயும் காப்பவர். அவர் எங்கும் உள்ளவர். எல்லாம் செய்ய வல்லவர். ஆதியும் அந்தமும் இல்லாதவர். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அவர் கவனித்து வருகிருர். நன்மை செய்பவருக்கு நன்மையும், தீமை செய்பவருக்குத் தீமையும் உண்டாக்குபவர். கடவுளேத் துதி.

அரசன்:—வணங்கத் தக்கவர்களில் அரசரும் ஒருவர்.

பெரியோர்:—வயதிலும், அறிவிலும் நமக்கு மூத்தவர்களான பெரியோரை எப்போதும் வணங்க வேண்டும். அவர்களுடைய மனம் சந்தோஷித்தால் நாம் மேன்மை அடையலாம்.

ஆகையால் மாதா, பிதா, குரு, தெய்வம், அரசன், பெரியோர் முதலியவர்களே வணங்கி எப்போதும் அவர்களுக்குப் பணிந்து நடக்க வேண்டும்.

---

## 2. கரடியும் இரண்டு சிநேகிதர்களும்

ஒரு ஊரில் இரண்டு சிநேகிதர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுள் ஒருவன் பெயர் சுப்பன். மற்ருெருவன் பெயர் கந்தசாமி. அவ்விருவரும் வேறு ஊருக்குப்போக எண்ணிப் புறப்பட்டனர்.

வழியில் மரஞ்செடிகள் அடர்ந்த காட்டைக் கடந்து செல்ல நேர்ந்தது. அக்காட்டில் சிங்கம், புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் வசித்து வந்தன.

அக்காட்டின் வழியே சென்றுகொண்டிருக்கும்போது, சுப்பன் என்பவன் கந்தசாமியைப் பார்த்து, "நண்பனே! எனது சிநேகிதர்களுக்கு ஆபத்து வரும்பொழுது நான் கைவிடவே மாட்டேன்" என்று தன்னையே புகழ்ந்து பேசிக் கொண்டு போனான்.

இப்படிப் போகும்போது பக்கத்திலுள்ள புதரிலிருந்து ஒரு கரடி உறுமும் சத்தம் கேட்டது. சுப்பன் பக்கத்திலிருந்த மரத்தில் விரைவாக ஏறி ஒளிந்துகொண்டான். கந்தசாமிக்கு மரமேறத் தெரியாது. அவன் தைரியமாகக் கீழே படுத்துக்கொண்டு பிணம்போலக் கிடந்தான்.

புதரிலிருந்து கரடி வெளியே வந்தது. கந்தசாமியினிடம் சென்று அவனை மோந்து பார்த்தது. பிறகு புரட்டிப் பார்த்தது. கரடி பிணத்தைத் தின்னாது என்பதைக் கந்தசாமி முன்னமே அறிந்திருந்தான். மூச்சை அடக்கிக்கொண்டான். கரடி தன்னால் ஆனமட்டும் புரட்டிப் பார்த்து அவனைப் பிணமென்று நினைத்துப் போய் விட்டது.

சுப்பன் மரத்திலிருந்தே அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். கரடி சென்ற பிறகு கீழே இறங்கினுன். கந்தசாமியிடம் வந்தான். "நண்பனே! கரடி உன்னிடம் வந்து ஏதோ இரகசியம் சொல்லிவிட்டுப் போயிற்றே; அதை என்னிடம் சொல்லலாகாதா?" எனக் கேட்டான்.

அதற்குக் கந்தசாமி சுப்பனைப் பார்த்து, "கரடி என் காதண்டை வந்து, 'ஆபத்தில் உதவி செய்யாதவனேடு சிநேகங் கொள்ளாதே' என்று சொல்லிப்போயிற்று" என்ருன். சுப்பன் தன்னைத் தானே முன்னல் புகழ்ந்து பேசிக்கொண்டதனல் வெட்கமடைந்தான்.

ஆகையால் தற்புகழ்ச்சியாகப் பேசிக்கொள்பவர்களோடு எக்காலத்தும் சிநேகம் வைத்துக் கொள்ளக்கூடாது. சிநேகம் செய்தால், ஆபத்து வரும் காலத்தில் நம்மைக் கைவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள். ஆதலால்,

சேரிட மறிந்து சேர்

---

## 3. எருதுகள்

படத்தில் உள்ள எருதுகளைப் பார். அவை இரண்டும் உயர்ந்த கம்பீரமான எருதுகள். அழகான ஒரு பெட்டி வண்டியிலே அவைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. அவை மிகவும் வேக

மாய் நடக்கும் சக்தி உள்ளவை. பசுவைப்பற்றி முந்திய புத்தகத்தில் படித்தீர்கள். எருது பசுவின் இனத்தைச் சேர்ந்தது. எருதைக் காளை மாடு என்றும் சொல்லுவார்கள். எருது மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்யும்



மிருகம். அது பசுவைப் போலவே எசமானனிடம் சாந்தமாய்ப் பழகும். அதற்குரிய உணவு, புல், வைக்கோல், அகத்திக்கீரை, பருத்திக் கொட்டை, தவிடு, பிண்ணாக்கு முதலியவைகளே. எருது மனிதனுக்குப் பலவிதத்திலும் உதவிசெய்கிறது.

இந்தப் படத்தில் இருக்கும் எருதுகள் என்ன வேலை செய்கின்றன? வேளாண்மை செய்யும் மனிதனுக்கு உதவியாய் அவன் நிலத்தை உழும் கலப்பையை இழுக்கின்றன. இவ்



வெருதுகள் காலை முதல் மாலைவரை, மிகவும்

பொறுமையாகவும், மண் என்றும், புழுதி என்றும், கட்டாந்தரை என்றும் பாராமல் கலப்பையை இழுத்துக்கொண்டு செல்லும்.



இந்த எருதுகளைப் பார். இவை சுற்றிச் சுற்றி வந்து கரும்பு ஆலையில் வேலை செய்கின்றன. இவைகளும் காலை முதல் மாலை வரை, ஓய்வு, ஒழிவு இல்லாமல் வேலை செய்யும். ஆலையின் அடியில் கொடுக்கப்படும் கரும்புத் துணுக்குகள், இந்த எருதுகள் சுற்றிவருவதால் நன்ருய் அறைக்கப்பட்டுச் சாறு பிழியப்படுகிறது. இந்தச் சாற்றிலிருந்து வெல்லம், சர்க்கரை முதலியன செய்யப்படுகின்றன.



இந்தப் படத்தைப் பார். இவ்வெருதுகள் எவ்வளவு பொறுமையாய் வேலை செய்கின்றன? இவை தினந்தோறும் காலை முதல் மாலை வரை செக்கு இழுத்துக்

கொண்டு இருக்கின்றன. இவை சுற்றி வருவதால் எள், கடலை முதலியவைகளிலிருந்து எண்ணெய் இறக்கப்படுகிறது. இவை சாதாரணமாய் இரவிலும் வேலை செய்வதுண்டு. அதனால் இவை படும் கஷ்டம் அதிகம்.



இந்தக் காளை வேலை ஒன்றும் செய்யாது. இது ஒரு பெரிய முரட்டுக் காளை. இதற்கு, சல்லிக்கட்டுக்காளை என்று பெயர். மனிதர் கூட்டம் கூட்டமாய் இதன்மேல்பாய்ந்து இதைப் பிடித்து அடக்க முயல்வார்கள். அவர்களை எல்லாம் திமிறிக்கொண்டு, சிலரைத் தூக்கி எறிந்தும் இது ஓடிவரும். இது கொல்லேறு எனப்படும். இக் காளையை அடக்குவதை முன் காலத்தில் கொல்லேறு தழுவுதல் என்பர்.

எருது இன்னும் எத்தனையோ விதங்களில் நமக்கு உபயோகப்படுகிறது. உழவு முதல், நெல் வீட்டுக்கு வரும்வரை எருது இல்லாமல் ஒன்றும் ஆகாது. பாரம் இழுப்பதும், சுமை சுமப்பதும் எருது செய்யும் வேலைகளே. இவ்வளவு உதவியாயிருக்கும் எருதை நாம் மிகுந்த அன்போடு

காப்பாற்றவேண்டும். வயதான பிறகு, அது வேலை செய்யச் சக்தியற்று இருக்கும்போது நல்ல உணவு கொடுத்து அதை ஆதரித்து வரவேண்டும். எருதுகளை, அவைகளது சக்திக்கு அதிகமாக வேலை வாங்கக்கூடாது. "மாடு முக்கிவர, வீடு நக்கிவர" என்னும் பழமொழியை அறிந்து வேலை வாங்கவேண்டும்.

---

## 4. வெண்ணிலா



அந்தரத்திலே யுலாவும் வெண்ணிலாவே—உன்னை
ஆக்கினவர் யாரோ சொல்வாய் வெண்ணிலாவே. 1

ஆனந்தமாய் ஆடிவரும் வெண்ணிலாவே—உன்
அன்புடையார் யாரோ சொல்வாய் வெண்ணிலாவே. 2

இவ்வுலகில் நன்னிலவை வெண்ணிலாவே—நீ
எங்கிருந்து பெற்றளிப்பாய் வெண்ணிலாவே. 3

ஈசன் உனைச் சடையில் வைத்தான் வெண்ணிலாவே
இன்பநிலாத் தந்திடவே வெண்ணிலாவே [எங்கும் 4

உலகமெலாம் சூழ்ந்துவரும் வெண்ணிலாவே—உனக்கு
உடம்பெல்லாம் வெள்ளிமயம் வெண்ணிலாவே. 5

ஊக்கமுற மாலைவரும் வெண்ணிலாவே—உன்போல்
ஊக்கமுற என்னைச் செய்வாய் வெண்ணிலாவே. 6
எங்கள் மனம் இன்பமுற வெண்ணிலாவே—நீ
எங்கு வித்தை கற்று வந்தாய் வெண்ணிலாவே. 7
ஏழைகளின் நல்விளக்காம் வெண்ணிலாவே—இன்னும்
எங்கெல்லாம் நீ போய் வருவாய் வெண்ணிலாவே, 8
ஐயமின்றி உன்னாலன்றோ வெண்ணிலாவே—நாங்கள்
ஆனந்தமாய்க் கூத்தாடுவோம் வெண்ணிலாவே. 9
ஒத்த பொருள் உன்னழகை வெண்ணிலாவே—இந்த
உலகினில் இல்லை அன்றோ வெண்ணிலாவே. 10
ஓகோ நீ நாளுக்கு நாள் வெண்ணிலாவே—உன்
உடம்பேனோ இளைக்கின்றாய் வெண்ணிலாவே. 11
ஔவையாரோ அழகுமானோ வெண்ணிலாவே—உன்னை
அண்டி மறைந் துள்ளிருப்பார் வெண்ணிலாவே. 12

---

## 5. சிங்கம்

மிருகங்களில் இரண்டு வகையுண்டு. அவை வீட்டு மிருகம், காட்டு மிருகம் என்பவை. மனிதனோடு பழகும் நாய், பூனை, ஆடு, பசு, காளை முதலிய மிருகங்களே வீட்டு மிருகங்கள். சிங்கம், புலி, கரடி, நரி, ஓநாய் முதலிய காட்டில் வசிக்கும் மிருகங்களே காட்டு மிருகங்கள். இவைகளுள் சிங்கத்தைப் பற்றி இங்குக் கூறுவோம்.

சிங்கம் ஒரு காட்டு மிருகம். இது பூனை வர்க்கத்தைச் சேர்ந்தது. குட்டி போட்டுப் பால்

கொடுக்கும். எட்டிலிருந்து பன்னிரண்டடி வரையில் நீளமும், நாலடி உயரமும் உள்ளது. இது மஞ்சளும் பழுப்பும் கலந்த நிறமுடையது. இதன் தலை பெரியது. ஆண் சிங்கத்



திற்குத் தலையிலும் பிடரியிலும் அடர்த்தியாக மயிர் வளர்ந்திருக்கும்.

சிங்கத்தின் பற்கள் மிகவும் நீளமாயும் கூர்மையாயும் இருக்கும். அதனுல் இது இரையை மெல்லாது துண்டு துண்டாய்ப் பிய்த்துத் தின்னும். சிங்கம் பூனையைப் போலவே பகலில்

உறங்கி, இரவில் இரைதேடும். சிங்கத்தின் கருவிழிகள் பகலில் இருப்பதைக் காட்டிலும் இரவில் அகலமாய் விரியும். அதனால் பகலிலும் இரவிலும் இதற்குக் கண்கள் நன்ருய்த் தெரியும்.

சிங்கத்தின் பாதங்கள் மிகவும் பெரியவை; அதிக பலமுள்ளவை. அவைகளில் கூரிய நகங்கள் உண்டு. நடக்கும்போது நகங்களின் நுனி தேயாமலிருக்கவும், நடக்கும் சப்தம் கேட்காமலிருக்கவும் சிங்கம் அவைகளை உள்ளே இழுத்துக்கொள்ளும். இது தன் இரையைக் கிட்டினவுடனே அதன் மேல் திடீரென்று பாய்ந்து கௌவிக் கொன்று தின்னும். சிங்கத்திற்கு மேலுதட்டில் மீசை மயிர் வளர்ந்திருக்கும். காது சிறுத்து வட்டமாயும், நுனி சிறிது நீண்டும் இருக்கும். இதன் கன்னம் மிகவும் உறுதியானது. பெண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் கிடையாது. இது ஆண் சிங்கத்தின் உயரத்தில் ஓரடி குறைந்திருக்கும். சிங்கம் மிகவும் பலமும் பெருந்தன்மையும் உள்ள மிருகம். ஆதலால் இதனை மிருகேந்திரன் என்பார்கள். சிங்கத்திற்குக் கோபம் வந்தால் கர்ஜிக்கும். அதைக் கேட்கும் பல மிருகங்கள் பயந்து ஓடும்.

## 6. சிங்கமும் ஆடும்



மலையோரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு மந்தையிலிருந்து ஆடு ஒன்று தப்பி மலை மேல் ஓடியது. அம் மந்தையை மேய்த்து வந்தவன், தப்பிச்சென்ற ஆட்டைப் பலவிடங்களிலும் தேடிக் காணமல் வீட்டுக்குச் சென்றான்.

தப்பிச் சென்ற அந்த ஆடு, மலையிலே பல விடங்களிலும் சுற்றிவிட்டு ஒரு குகையண்டை வந்தது. அதில் ஒருவரும் இல்லாதிருக்கவே, தைரியமாய் உள்ளே புகுந்து படுத்துக்கொண்டது. பொழுது போன பிறகு இருட்டிவிட்டதால் மந்தைக்குப் போய்ச்சேர அதற்கு வழி தெரியவில்லை.

அந்தக் குகை ஒரு சிங்கத்தினுடையது. அந்தச் சிங்கம் மிகவும் கோபமுள்ளது. அது காட்டிலே சுற்றித் தனக்கு வேண்டிய ஆகாரம் வயிறு நிறையத் தின்றுவிட்டுத் தன் குகைக்குத் திரும்பியது. குகையில் யாரோ நுழைந்திருப்ப தாய்ச் சிங்கத்துக்குத் தெரிந்தது. அதனால் அது வெளியில் நின்றபடியே மிகுந்த கோபத்தோடு,

இராகம் - மோகனம். தாளம் - ஆதி.

பல்லவி

ஆரடா கால் வைத்தவன்—என் குகைக்குள்ளே
ஆரடா கால் வைத்தவன்?

அநுபல்லவி

பாரடா இப்போதே ஓரறை அறைந்துன்னைப்
படக்கென்று பிடித்துள்ளம் துடிக்கக் கொன்றடித்
துண்பேன் (ஆரடா)

சரணம்

இருட்டுப்பொழுதைக் கண்டு திருட்டுத்தனமாய் வந்து
உருட்டும் புரட்டும் சொல்லி முரட்டுத்தனம் செய்யவே
(ஆரடா)

என்றது. இதைக் கேட்டதும் உள்ளேயிருந்த ஆடு, தைரியத்துடன் சிங்கத்தைப் பார்த்து,

இராகம் - மோகனம் தாளம் - ஆதி.

பல்லவி

பயலே நீ யாரடா—என்னைப்
பார்த்திந்த வார்த்தையை ஆத்திரமாய்ச்
சொல்லப் (பயலே)

**அநுபல்லவி**

அயலே இருப்பதற் கச்சமு மில்லாமல்
இயலே அறியாமல் எதிர்த்தனை பொல்லாத (பயலே)

**சரணங்கள்**

1. ஒரு நூறு வேங்கையும் இரு நூறு யானையும்
ஒரு நாளை உணவாக உண்டவன நானென்று
தெரியாமல் நெருங்கினாய் சிங்கத்தைக் கண்டதும்
அருமையாய்த் தினவே ஆசை கொண்டிருக்கி
றேன் (பயலே)

2. ஒரு சிங்கம் கிடைக்காமல் ஊரூராய்த் திரிகின்றேன்
பரவசம் கொண்டென்னைப் பார்த்திது பேசிய
மரியாதை தெரியாத மதிகெட்ட சிங்கமே
வருவாய் உனை உண்டபின் வளர்தாடி எடுப்
பேன் நான் (பயலே)

"பயலே! நீ யார்? அடா! என்னை யார் என்று தெரிந்துகொள்ள வில்லையோ! நேற்று, ஒரு தினத்திற்குள் நூறு வேங்கைகள், இரு நூறு யானைகள் எனக்குப் பலகாரமாயின. ஆனால் சிங்கம் ஒன்று கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டேன். சிங்கம் ஒன்றைத் தின்ற பிறகே சில நாளாய் வளர்த்திருக்கும் இத் தாடியை எடுக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நீ சிங்கமானால் இரு; இதோ வந்து விட்டேன்" என்று வெகு துடுக் காய்ச் சொன்னது.

இதைக்கேட்ட சிங்கம், "இதேது நாம் இதுவரைக் காணாத மிருகமாயிருக்கிறதே! நம் குகைக்குள் புகுந்தே நம்மைப் பயமுறுத்த வேண்டுமானால் இது எவ்வளவு தைரியமுள்ளதா யிருக்கவேண்டும்! தைரியத்திற்குத் தக்க பலமு மிருக்கும் அல்லவா! நாம் பேசாமல் ஓடினால் உயிர் பிழைக்கலாம். எதிர்த்து நின்றால் இன்றோடு நம் வாழ்வு தீர்ந்து விடும்" என்று எண்ணிக்கொண்டு ஓடினது.

சிங்கம் ஓடின ஓட்டத்தைக் கண்ட ஒரு நரி, "மஹாராஜாவே! என்ன ஒரு நாளுமில்லாத ஓட்டமாயிருக்கிறதே! என்ன விசேஷம்?" என்று கேட்டது. சிங்கம், "அப்பா! நான் என்ன செய்வேன்? எனக்குப் பெரிய ஆபத்து வந்துவிட்டது; அதனால் நான் உயிர் பிழைக்க ஓடுகிறேன்" என்றது.

அது கேட்ட நரி, "காட்டில் வாழும் மிரு கங்களுக்கெல்லாம் தலைவராகிய தங்களுக்கும் ஒரு ஆபத்து வருமா? அது என்ன? தயவு செய்து சொல்லுங்கள், கேட்போம்" என்றது.

சிங்கம்:—நரியே! நான் என்ன செய் வேன்! என் குகைக்குள்ளே ஏதோ ஒரு பெரிய மிருகம் புகுந்துகொண்டு இருக்கிறது. அது என்னைக் கண்டவுடனே பாய்ந்து கொல்ல

வந்தது. நான் தலை தப்பினால் போதும் என்று ஓடி வந்துவிட்டேன்.

நரி:—மஹாராஜாவே! நீங்கள் பயப்படத் தக்க மிருகமல்ல அது. இருட்டிலே தங்களுக்கு ஒன்றும் தெரிந்திருக்காது. நாம் இருவரும் போய்ப் பார்ப்போம் வருகிறீர்களா?

சிங்கம்:—அப்பா! நான் வரமாட்டேன். நீ வேண்டுமென்றால் போய்ப் பார்த்துவிட்டுவா.

நரி:—மஹாராஜாவே! நீங்கள் பயப்பட வேண்டாம். நான் கூடவே வருகிறேன். இந்தக் கொடியால் என்னை உங்கள் வாலோடு சேர்த்துக் கட்டிவிடுகிறேன். ஆபத்து வருமென்று தோன்றினால் என்னையும் கூட்டிக்கொண்டு வந்துவிடுங்கள்.

சிங்கம் அதற்கு இசைந்து கூடப் புறப் பட்டது. நரியும் சிங்கமும் குகையண்டை போயின. ஆடு இதைக்கண்டு, தந்திரத்தால் தப்பவேண்டும் என்று எண்ணி,

(நோட்டு)

மந்திரித் தொழிலுக்கேற்ற தந்திரம் தெரிந்த நரி
வந்திட்டாய்—உணவு—தந்திட்டாய்,
இந்தக்ஷணம் சிங்கத்தினை இன்பமுறத் தின்றிடுவேன்
எங்கடா—உனக்கும்—பங்கடா.

“நரியே! பேஷ்! நீ நல்ல மந்திரி. ஓடிப் போன சிங்கத்தை அழைத்து வந்து விட்டாய்.

மிகவும் வந்தனம். உனக்கும் வேண்டிய அளவு உணவு தருகிறேன்'' என்றது.

சிங்கம் இதைக்கேட்டுத் திரும்பிப் பாராமல் ஓட்டம் எடுத்தது. நரி வாலில் கட்டப் பட்டிருந்ததால் வழியே உள்ள கற்களில் அடி பட்டு இறந்தது.

---

## 7. மழை

மாணிக்கம்:—அப்பா! இப்பொழுதுதான் நான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தேன். சிறிது நேரம் தெருவிலே விளையாடப் போகலாமா?

தகப்பனார்:—மாணிக்கம்! இன்று நீ விளையாடப் போகவேண்டாம். ஏனென்றால் இன்னும் கொஞ்ச நேரத்தில் பெரிய மழை பெய்யப் போகிறது. தெருவில் விளையாடப் போனால் மழையில் நனைந்துவிடுவாய்.

மாணிக்:—இன்னும் கொஞ்ச நேரத்தில் மழைபெய்யும் என்று நீங்கள் எப்படி அறிந்தீர்கள்?

தகப்:—ஆகாயத்தைப் பார்! கருமை நிறமான மேகங்கள் அங்கும் இங்கும் போகின்றன; அதனால்தான் மழை வருமென்று சொன்னேன்.

மாணிக்:— நான் பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது இவை இல்லையே! இப்பொழுது எங்கிருந்து வந்தன?

தகப்:— நீ பள்ளிக்கூடம் போகும்போது சூரியன் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பிறகு நன்றாய்க் காற்று அடித்தது. பல இடங்களிலும் இருந்த மேகங்கள் ஒன்றுகூடி இங்கே வந்து சேர்ந்தன. இப்போது சூரியனிருக்கும் இடமே தெரியவில்லை பார்.

மாணிக்:—அப்பா! அதோ ஆகாயத்தில் 'பளிச் பளிச்' என்று மின்னுகிறது. 'படபட' என்று இடிக்கிறது. இனிமேல் மழை வந்து விடுமோ?

தகப்:—மாணிக்கம்! மின்னலும் இடியும் வந்தால் உடனே மழையும் வரும். "மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" என்று நீ படித்திருப்பாய். இதோ மழை வந்து விட்டது.

மாணிக்:—அப்பா! குளிர் காற்று வீசுகின்றது. நான் நன்றாகப் போர்த்துக் கொள்ளுகிறேன்.

தகப்:—இந்தக் காற்று மேகத்தின்மேல் பட்டதும் தான் மழை வந்தது.

மாணிக்:—அப்பா! மேகம் என்பது என்ன? அது குளிர்ந்த காற்றுப் பட்டதும் மழையாவது எப்படி? ஆகாயத்தில் ஜலம் ஏது?

தகப்:—இன்று காலையில் நீ என்ன பலகாரம் சாப்பிட்டாய்?

மாணிக்:—சுடச்சுட இட்டிலி கொடுத்தார்கள். தின்றேன்.

தகப்:—உன் தாயார் இட்டிலி செய்யும் போது நீ பக்கத்திலிருந்து பார்த்தாயா? இட்டிலி எதனுல் வெந்தது?

மாணிக்:—அப்பா! அடுப்பிலே நெருப்புப் போட்டு, இட்டிலிப் பானையை அம்மாள் அடுப்பின் மேல் வைத்தார்கள். அந்தப் பானையில் பாதி அளவு வரை தண்ணீர் ஊற்றினுர்கள். பிறகு சிறிது நேரம் அதை மூடி வைத்திருந்தார்கள். தண்ணீர் நன்ருய்க் கொதித்தது. உடனே மூடியைத் திறந்து இரண்டு தட்டுகளில் மாவை விட்டுப் பானைக்குள் வைத்து மூடிவிட்டார்கள். கொஞ்ச நேரம் கழித்து எடுத்தார்கள். இட்டிலி நன்ருய் வெந்து இருந்தது. எனக்குக் கொடுத்தார்கள்; தின்றேன்.

தகப்:—இட்டிலி எதனுல் வெந்தது என்று தெரிந்து கொண்டாயா?

மாணிக்:—அம்மாளைக் கேட்டேன். தண்ணீர் கொதித்ததால் உண்டான நீராவியால் வெந்தது என்று சொன்னார்கள். மேல் மூடியைத் திறந்து கீழே வைத்தபோது அதிலிருந்து தண்ணீர் சொட்டியது. அது எதனுல் என்று கேட்டேன். அந்த மூடியிலிருந்த நீராவியின் மேல், வெளியிலிருந்த குளிர் காற்றுப் பட்டதால், அதில் கொஞ்சம் தண்ணீர் உண்டாயிற்று என்று சொன்னார்கள்.

தகப்:—இது போலவே மேகமும் மழை ஆகிறது. குளங்களிலும் ஆறுகளிலும் சமுத்திரங்களிலும் உள்ள தண்ணீர் சூரிய உஷ்ணத்தால் ஆவியாக மாறி ஆகாயத்தில் போய்ச் சேருகிறது. இப்படிச் சேரச் சேரக் கருமை நிறமான மேகமாகிறது. மேகங்கள் ஒன்ருேடொன்று காற்ருல் மோதும்போது இடியும் மின்னலும் உண்டாகின்றன. குளிர்ந்த காற்றுப் பட்டதும் மேகங்கள் மழையாய் மாறி விடுகின்றன.

மாணிக்:—அப்பா! இந்த மழை பெய்வதால் என்ன பிரயோஜனம்? அநேக ஜனங்கள் நனைந்து கஷ்டப்படுவார்களே. இது இல்லாமலிருக்கக்கூடாதா?

தகப்:—மழை யில்லாவிட்டால் குளம், குட்டை, கிணறு முதலிய நீர் நிலேகளில் தண்ணீர் இருக்குமா? ஆற்றிலே தண்ணீர் ஓடுமா? நாம் உண்பதும் உடுப்பதும் மழையில்லாமல் ஆகுமா? மழை இல்லாவிட்டால் புல் பூண்டு ஏது? பயிர் பச்சை ஏது? உலகத்தில் எவ்வித உயிர்களும் பயிர்களும் மழையில்லாமல் வாழ முடியாது. நாம் கொஞ்சம் நனேவதற்கு வருத்தப்பட்டு மழை வேண்டாமென்றுல் எத்தனே உயிர்கள் நாசமாய்விடும். சரியான காலத்தில் மழை பெய்யாவிட்டால் பஞ்சம் உண்டாகிறது. அதனுல் அநேக உயிர்கள் நாசமடைகின்றன.

மாணிக்:—அப்படியா! அப்பா! மிகவும் சந்தோஷம்.

மாரியல்லது காரியம் இல்லே

---

## 8. கோழி

குடியானவர்கள் ஆடு மாடுகளே வளர்ப்பது போலவே கோழிகளேயும் வளர்க்கிருர்கள். கோழி பறவை இனத்தைச் சேர்ந்தது. ஆனுல் அது மற்றப் பறவைகளேப்போல் அதிக உயரம் பறக்காது. எட்டு அல்லது பத்து அடி உயரம் தாவுவது போல் பறந்து ஓடுகளிலும் கூரைகளிலும் உட்காரும்.

கோழி பார்ப்பதற்கு அழகாயிருக்கும். அது வெண்மை, கருமை, சிவப்பு, பழுப்பு முதலிய பல





நிறமான சிறகுகள் உடையது. பெண் கோழியைப் பெட்டைக் கோழி என்றும் ஆண் கோழியைச் சேவல் என்றும் சொல்வது வழக்கம். பெட்டைக் கோழியைவிடச் சேவல் பெரியதாகவும் அழகாகவு மிருக்கும். சேவலுக்குத் தலையில் கொண்டையுண்டு. பெட்டைக் கோழிக்கு அது இல்லை.

கோழி குப்பையைக் கால்களால் கிளறித் தானியமணிகளை அலகால் பொறுக்கித் தின்னும். ஆகையால் அதற்கேற்றபடி அதன் கால்களும் அலகுகளும் அமைந்திருக்கும். கோழிக்கு இரண்டு கால்களிலும், முன்பக்கம் மூன்றும், பின் பக்கம் ஒன்றுமாக நான்கு தடித்த விரல்கள் உண்டு. பின் விரல் வளைவதில்லை. விரல்க

லுள்ள நகங்கள் சிறியவையாயும் மொட்டை யாயும் இருக்கும்.

வீட்டுக் கோழிகள், தவிடு, நெல், சோளம், கேழ்வரகு முதலியவற்றை உணவாகக்கொள்ளும். குப்பைகளில் கிடைக்கும் புழு பூச்சிகளையும் தின்னும். சண்டை செய்வதற்கென்றே சேவல்கள் வளர்க்கப்படுவதுண்டு. அவை மிகவும் உயரமாகவும் கம்பீரமாகவும் இருக்கும். கோழியின் பின் விரலின் பக்கத்தில் சிறு கொம்புகள் போல் வளைந்த இரண்டு நகங்கள் உண்டு. இந்த நகங்கள் சேவல்களுக்குப் பெரியவையா யிருக்கும். ஆகையால், அவை இவற்றை ஆயுதமாகக் கொண்டு சண்டையிடும். சிலர் சிறிய கூர்மையான கத்திகளைச் சேவல்களின் கால்களில் கட்டியும் சண்டை செய்ய விடுவார்கள்.

சாதாரணப் பெட்டைக் கோழி வருஷத்தில் ஐம்பது அறுபது முட்டைகள் இடுவதுண்டு. ஒரு காலத்தில் தினம் ஒன்றுக்கு ஒரு முட்டையாகப் பத்துப் பதினைந்து முட்டையிட்டுப் பிறகு அவற்றின் மேல் இருந்து, அடைகாத்துக் குஞ்சுகள் பொறிக்கும். பொறித்த குஞ்சுகளைத் தன் சிறகால் அணைத்து வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றும். குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டுக் கொஞ்ச நேரம் ஆனவுடன் தானாக இரை

பொறுக்கித் தின்ன ஆரம்பிக்கும். கோழி மற்றப் பறவைகளைப் போலக் குஞ்சுகளுக்கு வாயில் இரை கொடுப்பதில்லை. தான் பொறுக்கும்போது வழியைக் காட்டும். அதைப் பார்த்துக் குஞ்சுகள் பழகிக்கொள்ளும்.

வியாதிகளைப் பரப்பும் புழு பூச்சிகளைக் கோழிகள் தின்று நமக்கு நன்மை செய்கின்றன. கோழிகளையும் முட்டைகளையும் சிலர் ஆகாரமாய் உபயோகிக்கிறார்கள். கோழி வளர்ப்பது ஒரு குடிசைத் தொழில். நன்கு கவனித்தால் அதில் நல்ல லாபம் உண்டு.

---

## 9. பையனும் பிரபுவும்

ஒரு பிரபு தம் ஊருக்கு அருகில் உள்ள சந்தையில் ஒரு மாடு வாங்கினார். அந்த மாட்டை நம்பிக்கையுள்ள ஒரு பையன் வசம் அனுப்பும்படி அதை விற்றவனிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டார். அந்தப்படியே மாட்டை விற்றவன் அதை அனுப்பினான்.

அதை ஓட்டிக்கொண்டு வந்த பையன் வயதில் மிகவும் சிறியவன். மாடு முரட்டு மாடாய் இருந்தது. அது தன்னைப் பிடித்துப் போகிற பையன் சிறுவன் என்று அறிந்ததும், இங்கும் அங்கும் இழுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது.

சிறுவன் தன்னால் இயன்ற அளவு சிரமப்பட்டு மாட்டை அடக்கிப் பார்த்தான். அவனால் முடிய



வில்லை. அவன் கஷ்டப்படுவதைச் சாதாரண உடையோடு அவ்வழியே வந்த ஒருவர் பார்த்தார்.

சிறுவன், "ஐயா! தயவுசெய்து எனக்ுச் சிறிது உதவி செய்யும். இதோ பக்கத்தில் இருக்கும் பிரபுவின் வீட்டிற்கு இந்த மாட்டை ஓட்டிக்கொண்டு போகவேண்டும். இது எனக்கு அடங்கவில்லை. நீர் இதைச் சிறிது பிடித்துக் கொண்டு வந்தால் எனக்குக் கிடைக்கும் கூலியில் பங்கு கொடுப்பேன்" என்றான். அதற்கு

அவர், "உன் கூலியில் சரிபாதி கொடுப்பதா யிருந்தால், நான் உதவி செய்கிறேன்" என்றார். சிறுவன் சம்மதித்தான். அவரும் மாட்டைப் பிடித்துக்கொண்டு வந்தார்.

பிரபுவின் வீட்டண்டை வந்ததும், உதவி யாக வந்தவர், "நான் இங்கேயே இருக்கிறேன். அவர்கள் கொடுக்கும் கூலியை நீ வாங்கி வந்து என் பங்கைக் கொடுத்தால் பெற்றுக் கொள்ளு கிறேன்" என்று சொல்லிப் பின் தங்கிவிட்டார்.

சிறுவன் உள்ளே நுழைந்ததும், இவர் வேறு வழியாய் அந்த வீட்டிற்குள் புகுந்து, ஒரு சேவகனிடம் ஐந்து ரூபாய் கொடுத்து, "இதை அந்த மாடு ஓட்டி வரும் பையனுக்குக் கொடு" என்று சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டார். இவர் அந்த வீட்டின் பிரபு என்று பையனுக்குத் தெரியாது. ஆகையால் அவர் குறித்த இடத்தில் வந்து நின்றுகொண்டிருந்தார்.

சிறுவன் சந்தோஷமாக வெளியே வந்து, பிரபுவைப் பார்த்து, "ஐயா! எனக்கு ஒரு ரூபாய் கூலி கொடுத்தார்கள். நான் சொல்லிய படி அரை ரூபாயை நீர் பெற்றுக்கொள்ளும்" என்று கொடுக்க வந்தான். அவர், "அப்பா! இந்த வீட்டில் இதை விட அதிகம் கூலி கொடுப் பார்களே! ஏன் இப்படிக் கொடுத்தார்கள்?

எதற்கும் உள்ளே போய் விசாரிப்போம் வா" என்று கூறி, அவனை உள்ளே கூட்டிச் சென்றார். உள்ளே புகுந்ததும் பிரபு, ஒரு பெரிய அறையிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மேஜையின்மேல் வைத்திருந்த ஒரு மணியை அடித்தார்.

உடனே அநேகம் சேவகர்கள் வேகமாய் வந்தார்கள். பின்பு சிறுவனைப் பார்த்து, "அப்பா! இவர்களில் உனக்கு ஒரு ரூபாய் கொடுத்தவன் யார்?" என்று கேட்டார். சிறுவன் தன் கூட வந்தவர் பெரிய பிரபு என்று அறிந்ததும், மிகுந்த பயம் கொண்டு பேசமுடியாமல் நின்றான். பிரபு திரும்பவும் அவனைப் பார்த்து அன்போடு, "அப்பா! பயப்படாதே! யார் கொடுத்தது? சொல் விசாரிப்போம்" என்றார்.

சிறுவன் தனக்கு ஒரு ரூபாய் கொடுத்தவனைக் காட்டினான். அந்தச் சேவகன் பிரபுவைப் பார்த்து, "ஐயா! நான் செய்தது பெரிய குற்றமே. சிறுவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்து நான் நான்கு ரூபாய் எடுத்துக்கொண்டேன். இதோ அதை வைத்துவிட்டேன். புத்தி இல்லாமல் செய்த பிழையைப் பொறுத்துக்கொண்டு என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று

சொல்லிக் காலில் விழுந்தான். பிரபு சிறுவன் உண்மை பேசியதற்கும் சொன்ன சொல்லைக் காப்பாற்றியதற்கும் மகிழ்ந்து, அவனுக்குப் பத்து ரூபாய் கொடுத்தனுப்பினர். சேவகனை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

உண்மையே உயர்வு அளிக்கும்

---

## 10. நமது தேகம்

பிள்ளைகளே! உங்கள் தேகத்தை எப்பொழுதாவது கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா? நமது தேகம் மிகவும் அருமையானது. தேகத்தின் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் மென்மையான தோல் மூடிக்கொண்டிருக்கிறது. நமது தோல் மிகவும் மிருதுவானது. அதில் முழுவதும் மயிர்க்கால்கள் அமைந்திருக்கின்றன. அந்தக் கால்களின் வழியே தேகத்திலுள்ள கெட்ட நீர் வியர்வையாக வெளிப்படுகிறது. தோலின்மீது அழுக்குப் படியாமல் நாம் அதைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். அதற்காக நாம் குளிக்கிறோம். எண்ணெயும் தேய்த்துக் கொள்ளுகிறோம். நமது தேகத்தை தலை, கழுத்து, உடல், கை, கால் என்ற பலபாகங்களாகப் பிரிக்கலாம். தேகத்தின் மேலே உள்ள தோலை எடுத்துப் பார்த்தால், உள்ளே சதை, எலும்பு, ரத்தக் குழாய்கள்,

நரம்புகள் முதலியவைகளைப் பார்க்கலாம்.



எலும்புகளில் சில குட்டையாயும் சில நீண்டும் காணப்படும். ஒவ்வொரு எலும்பும் மற்ற எலும்போடு தசைகளால் ஒன்ருய்க் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு மூட்டு என்று பெயர். இம்மாதிரி மூட்டுகள் இருப்பதால் தான் தேகத்தின் பல பாகங்களையும் நீட்டவும் மடக்கவும் முடிகிறது.

நமது தலை பனங்காயைப்போல் உருண்டையாயிருக்கிறது. தலை உறுதியான, தகடுகள் போன்ற எலும்புகளால் மூடப்பட்டிருக்கிறது. தலையில் கண், மூக்கு, வாய், காது முதலிய உறுப்புகள் அமைந்திருக்கின்றன. தலையின் உள்ளே மூளை

இருக்கிறது. இது மிகவும் மெலிவானது. ஆகையால் தான் தகடுபோன்ற எலும்புகளால் கெட்டியாக மூடப்பட்டிருக்கிறது. இம் மூளையி லிருந்துதான் பலவித நரம்புகள் தேகத்தின் பல பாகங்களுக்கும் செல்லுகின்றன. இதன் மூல மாய்த்தான், அறிவும் உணர்ச்சியு முண்டா கின்றன. தலைக்குக் கீழும் உடலுக்கு மேலும் கழுத்து இருக்கிறது.

உடலில் மார்பு, வயிறு, முதுகு, கை, கால் முதலியவைகள் அமைந்திருக்கின்றன. மார்புக் கூடும், வயிறும் வேருகப் பிரிக்கப்பட்டிருக்கின் றன. மார்புக்கூட்டுக்குள் இரத்தாசயம், சுவா சாசயங்கள் ஆகிய உறுப்புகள் இருக்கின்றன. வயிறு சிறிய பெட்டி போன்றது. அதனுள் ஆகாரம், தண்ணீர் இவைகள் இருப்பதற்கு வேண்டிய பைகளும் ஜீரணசக்திக்கு வேண் டிய கருவிகளும், கல்லீரல், நுரையீரல், குடல்கள் முதலிய உறுப்புகளும் நெருக்கமாய் அமைந் திருக்கின்றன.

நமது தேகம் ஒரு இயந்திரம் போன்றது. இயந்திரத்தைத் தினந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும். அது சரியானபடி வேலைசெய்வ தற்கு விறகு, கரி, தண்ணீர் முதலியவை அவ சியம் வேண்டும். அது போலவே நமது தேக

மாகிய இயந்திரத்தையும் தினந்தோறும் சுத்தம் செய்யவேண்டும். நமது தேகம் சரியானபடி வேலை செய்வதற்கு வேண்டிய அளவு ஆகாரம் சாப்பிடவேண்டும். நாம் எவ்வாறு இயந்திரத்தை ஜாக்கிரதையாகக் கவனிக்கிறோமோ அவ்வாறே நமது தேகத்தையும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டும்.

---

## 11. ஆலமரம்



பிள்ளைகளே! இதோ இருக்கும் படத்தைப் பாருங்கள். இது ஒரு ஆலமரத்தின் படம். மரங்கள் எல்லாவற்றிலும் ஆலமரம் மிகவும் பெரியது. இதன் கிளைகள் மிகவும் விசால

மாய்ப் படர்ந்து இருக்கின்றன. கிளைகளி லிருந்து விழுதுகள் தொங்குகின்றன. இவ் விழுதுகள் நாளடைவில் முதிர்ந்து, பூமிக்குள் இறங்கி, வேரூன்றி மரம்போல் வளர்கின்றன. ஆலமரத்தின் பரந்த கிளைகளை, பூமியில் இறங் கிய இவ்விழுதுகள் தூண்கள் போலத் தாங்கி நிற்கின்றன. ஆலமரத்தின் அடிக்கட்டை மிக வும் பருத்து இருக்கும்.

ஆலம்பழம் சிவப்பாய் இருக்கும். அது சுண்டைக்காயைவிடச் சிறிதளவு பெரியதாக இருக்கும். அதனுள் விதைகள் நிரம்பி இருக்கும். ஆலம் விதை கடுகைப்போலச் சிறுத்து இருக்கும். இவ்வளவு சிறிய விதையிலிருந்து எவ்வளவு பெரிய மரம் உண்டாகிறது! கடவு ளின் படைப்பில் இந்த விநோதத்தைக் கவனித் துப் பாருங்கள்.

ஆலமரம் குளிர்ச்சியான நிழல் தரும். அதனடியில் அநேகம் பேர் தங்கலாம். ஒரு பெரிய ஆலமரத்தடியில், ஒரு அரசனுடைய சைனியங்கள் முழுவதும் தங்கி இருக்கலாம். கூட்டங் கூட்டமாக ஊரூராய்ச் செல்லும் பிச்சைக்காரர்கள் ஆல மரத்தினடியில் பல நாட்கள் இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது மனிதர்களுக்கு நிழல் தருவதைத்

தவிர, அநேக விதமான பட்சி ஜாதிகளும், குரங்குகளும் வசிப்பதற்கு இடங் கொடுக்கிறது.

ஆலமரத்தின் இலைகளைத் தைத்து அதில் சாப்பிடலாம். ஆலம் பழத்தைப் பக்ஷிகள் ஆவலோடு தின்னும். மனிதரில் சிலரும் அதைத் தின்பார்கள். காய்ந்த இலைகள், முறிந்த கிளைகள் முதலியவற்றை அடுப்பெரிக்கலாம். ஆலம் விழுதுகளைச் சிறு குச்சிகளாக நறுக்கிப் பல் தேய்க்கலாம். அதனால் பல் மிகவும் உறுதியாகும். இது பற்றியே 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்ற பழமொழியும் வழங்கி வருகிறது.

---

## 12. மகாத்மா காந்தி

மகாத்மா காந்தி பெயரை அறியாதவர் ஒருவரும் நம் இந்தியாவில் இரார். இப்போதைய உலகில் மிகவும் சிறந்தவர் என்று உலகம் முழுவதும் இவரைப் போற்றுகிறது. அமெரிக்கப் பெரியார் ஒருவர், இவரை இரண்டாவது கிறிஸ்துநாதர் என்று கொண்டாடுகிறார். இந்தியர் யாவரும் இவரைப் பாரதநாட்டுத் தவப்புதல்வர் என்று போற்றுகின்றனர். அகிம்சையினாலும் அன்பினாலுமே இவ்வுலகில் எக்காரியத்தையும் செய்து முடிக்கலாம் என்னும் உண்மையைச் செய்கையில் காட்டி வந்தார்.



இவரது முழுப்பெயர் கரம்சந்திர மோகன் தாஸ் காந்தி. இவர் இந்தியாவின் மேற்குப் பாகத்திலுள்ள குஜராத்தில் பனியா என்னும்

வைசிய வகுப்பிற் பிறந்தவர். இவருடைய தகப்பனரும் பாட்டனரும் ராஜகோட் அரசருக்கு திவான்களாக இருந்தனர். இவர் சிறு வயதிலேயே கீழ்ப்படிதல், விடாமுயற்சி, மன உறுதி முதலிய நற்குணங்கள் நிறைந்தவராயிருந்தார். நன்ருய்ப் படித்துப் பரீட்சையில் தேறினர். இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறப் பிரியங்கொண்டார். இங்கிலாந்தில் மாமிசம் உண்பதில்லை யென்றும் மதுபானம் செய்வதில்லை யென்றும் தம் தாயிடம் உறுதி மொழி கொடுத்தார். இந்த வாக்குறுதியை, இவர் இங்கிலாந்தில் படிக்கும் காலத்தில், மிகுந்த கஷ்டத்துடன் காப்பாற்றினர். கடைசியில் பரீட்சையில் தேறி பாரிஸ்டர் பட்டம் பெற்று, இந்தியாவுக்குத் திரும்பினர்.

இவருக்கு இளமையிலேயே கலியாணம் ஆகியிருந்தது. இவரது மனைவியார் பெயர் கஸ்தூரிபாய் அம்மாள். இவர் தமது கணவருடைய நோக்கப்படியே சிறிதும் தவருது நடந்து வந்தார்.

மோகன்தாஸ் காந்தி இங்கிலாந்திலிருந்து திரும்பியதும், பாரிஸ்டராகச் சில காலம் வேலை பார்த்தார். அவ்வேலை அவருக்குப் பிடிக்கவில்லை. கொஞ்சகாலம் ஆசிரியராகவும் இருந்தார். அக்

காலங்களில் இவர் கடவுள் பக்தியிலும், உண்மை பேசுவதிலும் சிறந்தவர் என்று பெயர் பெற்றார். ஒரு சமயம் இவர் ஒரு வியவகார விஷயமாக ஆப்பிரிக்கா தேசம் செல்ல நேர்ந்தது. அங்குக் கூலியாட்களாக வேலைசெய்த இந்தியர்கள் கஷ்டப்படுவதையும், அந்நியர்களால் அவமதிக்கப் படுவதையும் கண்டார். மனவருத்தம் கொண்டார். இந்தியர்களுடைய நன்மைக்காக அந்நியர்களுடன் வாதாடினார். அதனால் இவருக்குப் பல கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்பட்டன. இவர் அவைகளைப் பொருட்படுத்தாமல் தாம் எடுத்துக்கொண்ட காரியத்திற்காகக் கடைசி வரை போராடினார். முடிவில் இந்தியர்களுக்குச் சில நன்மைகள் ஏற்பட்டன. பிறகு இவர் இந்தியாவுக்குத் திரும்பினார்.

இந்தியாவுக்குத் திரும்பியதும், இந்தியத் தேசீய விஷயங்களில் கலந்து உழைக்க ஆரம்பித்தார் இந்தியத் தேசீய சபையான காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து வேலை செய்தார். அகிம்சை வழிகளிலேயே இந்தியர் சுதந்திரத்திற்காகப் பாடுபடவேண்டும் என்று எல்லோருக்கும் கூறினார். இந்தியர்களில் பெரும்பாலோர் இவர் சொற்படி நடந்தனர். சுதந்திரப் போராட்டம் அகிம்சை முறையில் நடந்தது. அதன்

பலனாக மாகாண சுய ஆட்சி அளிக்கப்பட்டு காங்கிரஸ் கட்சியார் பல மாகாணங்களில் ஆட்சி செய்து வந்தனர். 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

உலகப்புகழ் பெற்ற தேசத்தலைவராயிருந்தும், காந்தியவர்கள் எளிய வாழ்க்கை நடத்திவந்தார். அவரிடம் ஆடம்பரம் சிறிதும் இருக்கவில்லை. புத்தர், ஏசுநாதர் முதலிய அவதார புருஷர்களைப்போல், அகிம்சையையும், அன்பையுமே தமது ஆயுதங்களாக உபயோகித்து வந்தார். மதுவிலக்கு, நாட்டுக் கைத்தொழில்களின் அபிவிருத்தி, தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றம், முதலிய விஷயங்களில் மிகவும் ஊக்கமாக உழைத்து வந்தார். ஏழை மக்களின் நன்மைக்காகவே என்றும் ஓயாமல் பாடுபட்டு வந்தார். இவர் சாந்த குணத்தின் அவதாரம் என்றே சொல்லாம். இது காரணமாகவே இவரை மகாத்மா காந்தி என்றும் யாவரும் போற்றுகின்றனர்.

இவர் 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ம் தேதி தேசத்திற்காகத் தன் உயிரையும் அர்ப்பணம் செய்தார். இவருடைய புகழ் உலகம் உள்ளளவும் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

# 13. கந்தைத் துணியின் கதை

## பாட்டு

சிறு:—1. கந்தைத் துணியே! கந்தைத் துணியே!
இந்தக் கதியை நீ ஏனோ அடைந்தாய்?
கந்:—2. சின்னக் குழந்தாய்! சின்னக் குழந்தாய்!
என்னத்தைச் சொல்வேன் என கதை [யைக்கேள்
3. நான் பிறந்தது காட்டிலே
நன்கு வளர்ந்தது நாட்டிலே
சிறு:—4. எந்தக் காட்டிலே நீ பிறந்தாய்?
எந்த நாட்டிலே நீ வளர்ந்தாய்?
கந்:—5. பிறந்தது நான் புஞ்சைக் காட்டில்
சிறந்தது அதைச் சேர்ந்த நாட்டில்
சிறு:—6. கேடு கெட்ட கந்தையாகக்
காடு கிட்டி வாழ்ந்தையோ?
கந்:—7. இல்லை குழந்தாய் இல்லை குழந்தாய்
நல்ல பருத்தியாய் நானும் இருந்தேன்.
8. பருத்திச் செடியில் பலரும் போற்றப்
பெருத்து வெளுத்துப் பிஞ்சும் பூவும்
9. காயும் மாறிக் கனிந்து முற்றி
நாயும் ஆளும் நன்றாய்க் காக்க
10. வெடித்து வெளியில் விழுமுன் என்னை
எடுத்துப் போற்றி இரக்க மறவே
11. கட்டிச் சுருட்டிக் கயிறு போட்டு
மட்டிச் சாக்கில் வளைத்து மடக்கி,
12. வண்டியி லேற்றிக் கப்பல் மூலம்
கொண்டு போகக் கொடுத்தா ரென்னை.

13. நாடு பலவும் நானும் சுற்றி
வாடு மேனி மயக்கம் கொண்டு
14 தூங்கி நிற்கும் துயரம் கண்டு
வாங்கிப் பெரிய மனிதர் பலரும்
15. விரும்பி என்னை விரைவி னோடு
இருமபினாலாம் யந்திரங்களில்
16. அரைப்பர் கொட்டை அகலச் செய்து
கரைப்பர் என்றன் கனத்த மேனி.
17. இறுக்கி நெருக்கி என்னைப் பிடித்து
முறுக்கி வளைத்து முடிவர் பலரும
18. பெயரும் மாறிப் பிறகு நூலாய்
அயர் வினோடும் அங்குக் கிடப்பேன்.
19. என்னைப்-பின்னும் யந்திரங்களால்
சின்ன பின்னம் இன்றிச் சேர்த்து
20. நெய்து துணிகள் நிறமும் கறையும்
செய்து மூட்டை சேர்த்து வைபபார்.
21. பின்னும புதிய பெயரும் மாறி
இன்னும் உயிரோ டிருபபேன் துணியாய்
22. மூட்டையாக முடிந்து கட்டி
நாட்டை யடைய நன்ருய் அனுப்புவர்.
23. விலைகள் கொடுதது மேனி மினுக்கப்
பலரும் எனனைப் பார்த்து வாங்க
24. ஒருவன் வாங்கி உரிமையாகக்
கருதிக்கொண்டு கல்வில அறைந்து
25. வருடமொன்று வைத்திருந்தான்.
பிரியமுடனோர் பிச்சைக்காரன்
26. கேட்டதாலே நீட்டினான்
வாட்டமாக ஓட்டினான்.

27. அவனும் என்னை அலக்ஷியம் செய்யச்
சிவனை எண்ணித் தெருவில் கிடந்தேன்.
28. சின்னக் குழந்தாய் சின்னக் குழந்தாய்
என்ன சொல்வாய் என் கதை கேட்டாய்.

---

## 14. சிபிச் சக்கரவர்த்தி

முன் காலத்தில் சிபி என்னும் ஓர் சக்கரவர்த்தி இருந்தான். அவன் மிகவும் நற்குணம் வாய்ந்த உத்தமன். நீதிமுறை தவருது அரசாண்டு வந்தான். பிச்சை எடுப்பவர்க்கு இல்லை என்னுது கொடுப்பவன். அண்டினவரை ஆதரிப்பவன்

ஒரு நாள் சிபிச் சக்கரவர்த்தி வேட்டையாடக் காட்டிற்குச் சென்ருன். அங்கு வேட்டையாடிக் களைத்து ஒரு இடத்தில் உட்கார்ந்தான். அப்பொழுது மிகவும் பயந்து நடுநடுங்கிய ஒரு புரு அவன் மடியில் வந்து அடைக்கலம் புகுந்தது. பின்னுல் அதைத் துரத்திக்கொண்டு ஒரு பருந்தும் வந்தது. மடியில் விழுந்த புருவைச் சிபி மறைத்துக் கொண்டான். அதைப் பார்த்த பருந்து அரசனை நோக்கி, "அரசனே! உன் மடியிலிருக்கும் புரு என்னைச் சேர்ந்தது. நான் பிடித்த பின் தப்பி, உன்னிடம் ஓடிவந்து

விட்டது. ஆகையால் அதை என்னிடம் ஒப்பு விக்க வேண்டும்'' என்றது. அது கேட்ட சிபி, "ஏ பருந்தே! என்னிடம் அடைக்கலம் புகுந்த புறுவை நான் ஒருக்காலும் விடேன். ஆனால் அதற்குப் பதிலாக நீ எது கேட்டாலும் தருகி றேன்; கேள்'' என்றான். அதற்குப் பருந்து, அரசனே! எனக்கு இப்பொழுது வேண்டியது ஆகாரமே. ஆகையால் அப்புறுவின் எடை யுள்ள மாமிசம் கொடுத்தாலும் போதும்'' என்றது. சிபி உடனே அதற்குச் சம்மதித்து ஒரு தராசின் ஒரு தட்டில் புறுவை வைத்து, மறு தட்டில் தன் சதையை அறுத்து வைக்க ஆரம்பித்தான். முதலில் கொஞ்சம் சதையைத் தட்டில் வைத்தான். அப்பொழுது புறு இருந்த தட்டு மேலேறவே இல்லை. உடனே சிபி முன் பின் யோசியாமல், தானே மறு தட்டில் ஏறினான். இரண்டு தட்டும் சமமாயிற்று.

ஆனால் மறு நிமிஷத்தில் புறுவையும் பருந்தையும் காணவில்லை. அவன் எதிரே இந் திரன், அக்கினி ஆகிய இரண்டு தேவர்களும் தோன்றி, "அரசனே! உன்னுடைய மனதைப் பரிசோதிக்கவே நாங்கள் இருவரும் புறுவும் பருந்துமாய் வேடங்கொண்டு வந்தோம். நீ உன் தேகத்தையே கொடுத்து என்றும் அழி

வில்லாத புகழைச் சம்பாதித்துக் கொண்டாய். நீ சுகமாய் நீடூழி காலம் வாழ்வாயாக" என்று கூறி, அவனுக்குப் பல வரங்கள் தந்து மறைந்தனர்.

பிள்ளைகளே! ஆகையால் நீங்களும் பிராணிகளிடத்தில் எப்பொழுதும் தயையுள்ள வர்களாக இருக்கவேண்டும்.

---

## 15. நெல் வயல்

மகன்:—அப்பா! இன்று நமது வயல் அறுவடையாகும் என்று சொன்னீர்களே! அதைப் போய்ப் பார்க்கலாமா?

தகப்பனார்:—குழந்தாய்! ஆமாம்! பக்கத்து வயலை அறுத்த ஆட்கள் நம் வயலுக்கு இன்று வருவதாய்ச் சொன்னார்கள்.

மகன்:—அப்பா! நம் வயல் இங்கிருந்து எவ்வளவு தூரமிருக்கும்?

தகப்பனார்:—இதோ ஊர் ஓரத்தில்தான் இருக்கிறது. நாம் போகலாம் வா.

மகன்:—இது தானே நம் வயல்! ஏன் அப்பா கதிர் எல்லாம் சாய்ந்து கிடக்கின்றன?

தகப்பனார்:— நெல்மணி முற்றிவிட்டதால் பாரம் தாங்கமாட்டாமல் கதிர் கீழே சாய்ந்து விட்டது.

மகன்:—அப்பா! நெற்கதிர் எப்பொழுதும் இந்த நிறமாய்த்தான் இருக்குமோ?



தகப்பனார்:—குழந்தாய்! கதிர் ஆரம்பத்தில் பச்சை நிறமாய் இருக்கும். பால் பிடித்ததும் சிறிது வெண்மையாய் இருக்கும். பிறகு கதிர் முற்றினால் இம்மாதிரி பொன்னிறமாய் இருக்கும். கதிர் பசுமையாய் இருக்கும்போது நிமிர்ந்து நிற்கும். முற்றியபின்தான் இப்படிச் சாய்ந்து விடும்.

மகன்:—அப்பா! இம்மாதிரி நெற்கதிர் உண்டாவதற்கு நாம் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும்?

தகப்பனர்:— இதற்குச் செய்ய வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. அவை உழவு, பரம்படித்தல், நாற்று நடுதல், களை பிடுங்குதல், தண்ணீர் பாய்ச்சுதல் முதலியன.

மகன்:—உழவு என்றால் என்ன அப்பா?

தகப்பனர்:—கலப்பை அல்லது ஏர் என்று சொல்லப்படும் ஒரு கருவியால் வயலின் தரையைப் பிளந்து புழுதியாக்கி, பயிர் செய்யத் தக்கதாகச் செய்வதே உழவு என்பது. கலப்பைகளில் பல விதங்கள் உண்டு. மரத்தினாலே செய்து நுனியில் இரும்பினால் ஆகிய கொழு என்னும் கருவியைச் சேர்த்து உபயோகிக்கிறார்கள். ஆனால் இப்போது இரும்புக் கலப்பைகள் உபயோகப்பட்டு வருகின்றன. "அகல உழுவதில் ஆழ உழு" என்றபடி இந்தக் கலப்பையால் ஆழமாக உழவேண்டும்.

மகன்:— அப்பா! சரி! அப்படியானால் பரம்படித்தல் என்றால் என்ன?

தகப்பனர்:—உழுத நிலத்தில் தண்ணீர் பாய்ச்சிப் புழுதியைச் சேறாக்கிக் கட்டிகள் கரையும்படி ஒரு பெரிய மரச்சட்டத்தை அவற்றின்

மேல் மாடுகளைக்கொண்டு இழுத்து மட்டமாக்கு வதே பரம்படித்தலாம். இப்படிப் பரம்படிப்பதால் வயல் நடக்கூடிய நிலைமையை அடையும்.

மகன்:—நாற்று நடுதல் என்றால் என்ன?

தகப்பனார்:—வயலில் ஒரு சிறு பாகத்தில், நெல்லை நெருக்கமாக விதைத்துத் தண்ணீர் பாய்ச்சி ஏறக்குறைய ஒருச் சாண் உயரம் வளர விட்டு, அவைகளைப் பிடுங்கி வயல்களில் விசால மாக நடுவார்கள். இது தான் நாற்று நடுதல் எனப்படும்.

மகன்:—இதன்பின் களை பிடுங்குவார்கள் என்றீர்களே; அது என்ன?

தகப்பனார்:—இவ்வாறு நட்ட வயலில் நெல் கதிர்களின் நடுவே கொஞ்ச நாட்களில் ஒருவகைப் புல்லும் வளரும். இவ்வகைப் புல், நெல் கதிர்களுக்கு வேண்டிய உணவைத் தின்றுவிடு மாகையால், அவைகளைப் பிடுங்கி எறிவார்கள். இதுதான் களை எடுப்பது. பிறகு வயல் நிறையத் தண்ணீர் பாய்ச்சுவார்கள். பலமுறை தண்ணீர் பாய்ச்சிய பிறகு சிறிதாக நெல்மணிக் கதிர் தோன் றும். அவை நன்றாக முற்றிய பிறகு கதிர் அறுப்பும் நடக்கும். அதற்குத்தான் நாம் இப்பொழுது வந்திருக்கிறோம்.

மகன்:—அப்பா! இன்று வயலுக்கு வந்த தில் அநேகவிஷயங்கள் தெரிந்து கொண்டேன்.

---

# 16. போலீஸ்காரன்

இந்தப் படத்தில் நாம் பார்ப்பது போலீஸ் காரனுடைய உருவம். இவன் இப்பொழுது நான்கு வீதிகள் கூடும் இடத்தில் நிற்கிறான். அங்கும் இங்கும் ஓடும் பலவித வண்டிகள்



ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமலும், வழியில் நடப்போர் வண்டிச் சக்கரங்களில் சிக்கி இறந்து போகாமலும் காக்க வேண்டியது இவனுடைய வேலை.

பெரிய நகரங்களில் மோட்டார் வண்டிகளும், குதிரை வண்டிகளும், சைக்கிள் முதலிய

136339
சென்னை-600 008.

பலவித வண்டிகளும் கணக்கில்லாமல் போவதும் வருவதுமாய் இருக்கும். அவை ஒன்றோ டொன்று மோதிக் கொண்டால் அதிக உயிர்ச் சேதங்கள் நேரிடும். அதைத் தடுக்க அவன் ஒரு சமயத்தில் ஒரு பக்கத்தில் செல்லும் வண்டி களையே செல்லவிடுவான். மற்றப் பக்கங்களில் வரும் வண்டிகளைத் தன் கையை நீட்டி நிறுத்தி விடுவான். தெருக்களில் கலகம் நடக்காமலும், வண்டிகள் மோதிக்கொள்ளாமலும் மற்ற ஜனங் களுக்குக் கெடுதல் நேராமலும் கவனிக்கவேண் டியது இவனுடைய வேலையே. பகல் முழுவதும் இப்படிக் காவல் காப்பதைப்போலவே, இரவில் நகரத்தைச் சுற்றி வந்து காவல் காக்கவும் போலீஸ்காரர்கள் உண்டு. நகரங்களைத் தவிர பெரிய கிராமங்களுக்கும் போலீஸ்காரர்கள் உண்டு.

சிறிய ஊர்களில் பத்து போலீஸ்காரர்களும் அவர்களுக்கு மேல் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் இருப்பார்கள். பெரிய நகரங்களில் நான்கு ஐந்து போலீஸ் ஸ்டேஷன்கள் உண்டு. ஒவ் வொன்றிலும் சப்-இன்ஸ்பெக்டரும், போலீஸ் காரர்களும் இருப்பார்கள். இவர்கள் எல்லோ ருக்கும் மேலே, சர்க்கிள்-இன்ஸ்பெக்டர், டிப்டி-சூப்பிரன்டெண்டெண்டு, சூப்பிரன்டெண்டெண்டு

முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள்.

வீடுகளில் களவு செய்யும் திருடர்களையும், கொள்ளைக்காரர்களையும், ஜனங்களுக்குக் கெடுதி செய்வோர்களையும் போலீஸ்காரர் பிடித்துச் சிறையில் அடைத்து, அவர்களுடைய குற்றங்களுக்குத் தகுந்த தண்டனையும் விதிப்பார்கள்.

இப்படிப் பலவிதத்திலும் நமது நன்மையைக் கருதியே அரசாங்கத்தார் போலீஸ் இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவர்கள் செய்யும் வேலை மிகவும் கஷ்டமானது. சில சமயங்களில் இவர்களுக்கும் ஆபத்து நேரிடுவது உண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் நாம் இவர்களுக்குக் கூடிய மட்டும் உதவி செய்யவேண்டும்.

---

## 17. கல்விப் பெருமை

(கும்மி)

1. நீர்வள மோடு நிலவள மும கொண்டு
நெஞ்சினில் வஞ்சக மிலலா தவர்
பார்வள மோங்கிப் பழகி யுறைந்திடும்
பாண்டிய நாட்டு நகர மொன்றில்,

2. செல்வம் பெருகச் சிறந்த புகழொடு
சிந்தை மகிழுங் கலைபயின்று
கல்வி நலமும் கனிந்து புகழகொண்டு
காராளன் ஒருவன் வாழ்ந்திருந்தான்.

3. வேளாண்மை செய்து மிகுந்த பொருள் சேர்த்து
வித்தையும் நன்கு பயின்றதனுல்
தாளாண்மையால்வந்த தனத்தைக் கொண்டவன்
தருமம் பலவுமே செய்து வந்தான்.

4. இல்லற வாழ்வெனும் நல்லற வாழ்வினில்
இருந்த அவனுக் கிருவர் மக்கள்
நல்ல குணங்கள் பழகும் விருப்புடன்
நன்மை பெருக வளர்ந்திருந்தார்.

5. மூத்தமகன் செல்வம் முக்கிய மென்றெண்ணி
முயற்சி செய்யா திருந்து தந்தை
காத்த பொருள்களைக் கைக்குவந்தபடி
கண்ட கண்டவழி செலவழித்தான்.

6. இளையமகன் கல்வி இன்பம் சிறந்ததென்
றெண்ணிமிகப் பயினரூங்கி வந்தான்
விளைவதை ஒன்றும் அறியாது மூத்தவன்
வீணிற் படிக்கா திருந்து வந்தான்.

7. அப்பன் இறந்ததும் மூத்தமகன் பொருள்
அத்தனையும் தான் எடுத்துக் கொண்டான்
'இப்பண மொன்றும் எனக்குவேண்டா' மென்
றிளையவன் சென்றனன் வேற்றிடமே.

8. அந்நிய நாட்டின் அரசரைக் கண்டவன்
ஆனந்தத்தோடு கலை வளர்த்து
நன்னயமாக இளையவன் வாழ்ந்தனன்
நாடெங்கும் போற்றும் புகழுடனே.

9. துஷ்டர் பலரைத் துணையெனக் கொண்டுதன்
சொந்தப் பணத்தைத் தொலைத்த பின்பு
கஷ்டத்துடன் பல கடன்களும் பட்டுக்
கலங்கியே நின்றனன் மூத்தவனே.

10. திருடப் புகுந்து சிறையும் அடைந்தவன்
திண்டாடும் தன்மை அறிந்திளையோன்
விரைவிற் புகுந்து பணங்கள் கொடுத்துமே
மீட்டனன் அண்ணனை வாட்டமற.

11. பின்னரும் வேண்டிய பெருமை யுடனே
பேணியே தன்னேடும் வைத்திருந்தான்
நன்னல மாகிய கலவிப் பயனவன
நன்கு தெரிந்து மகிழ்ந்திருந்தான்.

12. இந்தக் கதையினுல் இனபப் பெருக்கத்தை
இளையவன் தான்பெறக் காரணமாய்
வந்தபலன் பெற வைத்திட்ட கல்வியின்
மகிமை அறிவீர்கள் பாலர்களே.

---

## 18. காகிதம்

இப் புத்தகம் எதில் அச்சிடப்பட்டு இருக்கிறது? காகிதத்தில்தான் அச்சிடப்பட்டு இருக்கிறது. இந்தக் காகிதம் எப்படி உண்டாகிறது தெரியுமா? சொல்லுகிறேன் கேளுங்கள்.

உபயோகப்படாத கந்தைத் துணிகள், வைக்கோல், சில மரப்பட்டைகள், சருகுகள், பனை ஓலைகள், வாழைப்பட்டைகள், மூங்கில் முதலியவைகளிலிருந்து காகிதம் செய்யப்படுகிறது. இப்போது உபயோகப்படாத காகிதங்களிலிருந்தும் காகிதம் செய்கிருர்கள். இவைகளை நன்ருகத் தண்ணீரில் ஊற வைப்பார்கள். பிறகு அவற்றின் அழுக்கை நீக்கிச் சுத்தம் செய்து

ஒரு பெட்டியில் போடுவார்கள். அப்பெட்டியில் சுழலக்கூடிய அநேக கத்திகள் உண்டு. அக் கத்திகள் இந்த ஊறின பதார்த்தங்களை நன்ருய்ச் சிதைத்துக் கூழாக்கிவிடும்.

அக்கூழிலுள்ள தண்ணீரை வடித்து விடு வார்கள். பிறகு சுத்தமான தண்ணீரில் ஒருவிதச் சுண்ணும்பையோ, அல்லது சுத்தம் செய்த களி மண்ணையோ கரைத்து, அதை மேலே கூறியுள்ள கூழுடன் கலப்பார்கள். அப்போது அந்தக் கூழ் பால் போல வெண்மையாய் இருக்கும். இக்கூழி னுல் செய்யப்பட்ட காகிதம் சுத்தமான வெள்ளை நிறமாய் இருக்கும் ஆனல் நாம் பலவித வர்ணங் கள் உள்ள காகிதங்களைப் பார்க்கிறோம். இந்தக் கூழில் வேண்டிய வர்ணங்களைச் சேர்த்தால் அந் தந்த நிறமுள்ள காகிதங்கள் ஆகும்.

இந்த விதமான கூழைப் பாத்திரங்களில் ஊற்றி, அடுப்பில் வைத்துக் கட்டியாகாமல் பக்குவமாய்க் காய்ச்சுவார்கள். சரியான பக்குவம் ஆன பின் ஒருவித அச்சில் ஊற்றிச் சிறிது நேரம் உலரவைப்பார்கள். அதன்பின் அதை ஒரு மெல்லிய கம்பளத்தின் மீது பரப்பி மற்ருெரு கம்பளத்தால் மூடுவார்கள். இதே மாதிரி மூடிய பல கம்பள அடுக்குகளை ஒரு யந்திரத்தில் வைத்து அழுத்துவார்கள். இவ்வாறு அழுத்தின

தும் அவைகளிலுள்ள தண்ணீரெல்லாம் வெளி யேறிவிடும். அப்போது அவை பலவித அள வுள்ள காகிதங்களாக இருக்கும். இவைகளைப் பின் னும் நன்ருக உலர்த்தி, ஒரே அளவாக அறுத்து, கட்டுகளாகக் கட்டி விற்பனைக்கு அனுப்புவார்கள்.

இம்மாதிரிக் காகிதங்களால் தான் நீங்கள் படிக்கும் புத்தகங்களும், எழுதும் காகிதங்கள், நோட்டுகள் முதலானவைகளும் உண்டாகின்றன. உங்கள் ஊருக்குப் பக்கத்தில் ஏதாவது காகிதத் தொழிற்சாலை யிருந்தால் அதைப் போய்ப் பாருங்கள்.

---

## 19. குருபக்தி

வடநாட்டில் ஒரு காட்டில் வேடன் ஒரு வன் இருந்தான். அவன் பெயர் ஏகலைவன். அவன் வில்வித்தை கற்றுக்கொள்ள ஆசை கொண்டான். அக்காலத்தில் துரோணர் என் பவர் வில்வித்தையில் மிகவும் தேர்ந்தவர். வேடன் அவரிடம் சென்று, தனக்கு வில் வித்தை கற்றுக் கொடுக்கும்படி வேண்டினன். ஆனல் அவர் அவனுக்குச் சொல்லிக் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார். எவ்வளவு கெஞ்சியும் காரியம் கைகூடாததால், வேடன் மனம் வருந்தி வனம் சென்ருன்.

ஆனால் வேறு யாரிடத்திலும் வித்தை கற்க அவனுக்கு இஷ்டம் இல்லை. ஆகையால்



அவன் துரோணரைப் போல் ஒரு மண் உருவம் செய்து வைத்து அதைக் குருவாக மதித்துப் பணிந்து வந்தான். அதன் முன் நின்று

கொண்டே வில்வித்தை பழகினுன். நாளடைவில் வில்வித்தை முழுவதும் கற்றுவிட்டான்.

ஒரு நாள் அந்தக் காட்டில் ஒரு நாய் சென்றது. ஏகலைவன் அதன் மேல் ஒரு அம்பு எய்தான். அந்த நாய் துரோணருடைய முக்கிய சிஷ்யஞன அர்ச்சுனனுடையது. அடிபட்டு வந்த தன் நாயைப் பார்த்த அர்ச்சுனன் ஆச்சரியப்பட்டான். ஏனென்ருல், அந்த மாதிரி அம்பு விடுவது அவனுக்கு மட்டும்தான் துரோணர் கற்பித்து இருந்தார்.

உடனே அர்ச்சுனன் வேடனிடம் சென்று, "உன் குரு யார்?" என்று கேட்டான். அதற்கு அவன், "என குரு துரோணர் தான்" என்ருன். அதுகேட்ட அர்ச்சுனன் துரோணரிடம் சென்று நடந்ததைக் கூறினுன். அதற்குத் துரோணர், "அப்பா! அர்ச்சுன! நான் அவனுடைய குரு அல்ல. அவனுக்கு வித்தை கற்பிக்கவில்லை. ஆனல் இது மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது. ஆகையால் அவனிடம் செல்வோம்" என்று கூறி இருவரும் ஏகலைவனுடைய இருப்பிடம் சென்ருர்கள்.

ஏகலைவன் துரோணரைக் கண்டதும் பல வித உபசாரங்கள் செய்தான். வித்தை கற்ற விவரத்தைச் சொன்னுன். அது கேட்ட துரோ

ணர், வில்வித்தை கற்றதற்காக, அவனுடைய வலது கைப் பெருவிரலைக் காணிக்கையாகக் கேட்டார். ஏகலைவன் உடனே முன்பின் யோசியாமல் தன்னுடைய வலது கைப் பெரு விரலை அறுத்துக் கொடுத்தான்.

துரோணர் ஏகலைவனுக்கு நேரில் வில் வித்தை கற்பிக்கவில்லை. அப்படி இருந்தும் அவன் அவரைக் குருவாக எண்ணி, வில் வித்தையில் தேர்ச்சி பெற்றான். அவர் கேட்ட காணிக்கையையும் உடனே கொடுத்தான். அவ னுடைய குருபக்தியைப் பாருங்கள்! நமக்கு வித்தை கற்பிக்கிறவரே குரு ஆவார். அவரைக் கடவுளைப்போல் மதிக்க வேண்டும்.

---

## 20. நமது தலைநகர்

நமது மாகாணத்துக்குச் தலைமை நகரம் சென்னை. அதனால்தான் நம் மாகாணத்துக்குச் சென்னை மாகாணம் என்று பெயர்.

சென்னை நகர் நமது மாகாணத்தில் கிழக்கே சமுத்திரக் கரையில் இருக்கிறது. அது ஒரு துறைமுகப் பட்டணம் ஆகையால் அது பெரிய வியாபார ஸ்தலமாய் விளங்குகிறது. நமது மாகாணத் தலைவரான கவர்னரின் மாளிகை அங்கே தான் இருக்கிறது. அந்த

நகரத்தின் கடற்கரையில், அழகிய துறைமுகமும் அதைச் சேர்ந்த ஆபீசும் உண்டு. இதைத் தவிர, ஹைகோர்ட்டு என்ற உயர்தர நியாயஸ்தலம், செயிண்டு ஜார்ஜு கோட்டை, சட்டசபை, மாகாணக் கல்லூரி முதலிய பல கட்டிடங்களும் கடற்கரையில் தான் இருக்கின்றன. சாயங்கால வேளையில் ஜனங்கள் கடற்காற்று வாங்கிக்கொண்டே உலாவுவதற்காகவே மரீனு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு பக்கங்களிலும் செடிகள் நடப்பட்டுச் செம்மைப் படுத்தப்பட்ட பாதைகள் உண்டு. ஜனங்கள் உட்காருவதற்கு இடங்களும் அங்கே இருக்கின்றன. கடற்கரையில் ரேடியோ மூலமாய்ச் சங்கீதம் கேட்கலாம்.

துறைமுகத்தில் பல தேசங்களிலிருந்து கப்பல்கள் வருவதையும் போவதையும் பார்க்கலாம். நகரம் முழுவதும் மின்சார விளக்குகள் பிரகாசிக்கும். மின்சாரத்தின் சக்தியாலேயே ட்ராம் என்னும் அதிசயமான வண்டி ஓடுவதையும் காணலாம். மனிதர்களால் இழுக்கப்படும் ரிக்ஷா வண்டி



இவ்வூரில் அதிகம். இந் நகரத்தின் முக்கியமான

வீதிகள் அகலமாயும், ஒழுங்காயும், அழகிய கட்டிடங்களோடும் விளங்கும். மியூசியம், பீபிள்ஸ் பார்க், அக்வேரியம் என்னும் இடங்களும் அங்கு உண்டு. இவைகளில் மியூசியத்தில் உயிரில்லாத மிருகங்கள் பழைய காலத்து ஆயுதங்கள் முதலிய அபூர்வமான பொருள்களையும் காணலாம். பீபிள்ஸ் பார்க் என்பது அழகிய ஓர் நந்தவனம். இதன் ஒரு பாகத்தில் மிருகக் காட்சிச் சாலை இருக்கிறது. இதில் பல விதக் காட்டு மிருகங்கள், பட்சிகள் முதலானவைகளை உயிருடன் காணலாம். அக்வேரியத்தில் பலவித மீன்களும் உயிருடன் வைக்கப்பட்டிருக்கின்றன.

செயிண்டு ஜார்ஜு கோட்டையில் கணக்குப் பரிசோதகர் ஆபீசு முதலிய அரசாங்க ஆபீசுகள் இருக்கின்றன. இக்கோட்டை முன் காலத்தில் ஆங்கிலேயர் தங்கள் பாதுகாப்புக்காகக் கட்டிக் கொண்டது. அக்காலத்தில் கோட்டையிலிருந்த ஆங்கிலேயருடன் வியாபாரம் செய்வதற்காகச் சில ஜனங்கள் குடியேறினார்கள். பிறகு நாளடைவில் பல ஜனங்கள் அங்குக் குடியேறவே அது பெரிய நகரமாய்விட்டது. அதுதான் இப்போது சென்னை நகரமாய் விளங்குகின்றது.

இந்நகரத்தில் மேற்கூறிய கட்டிடங்கள் தவிர அநேக கலாசாலைகளும், பல ஆபீசுகளும், வியா

பாரக் கம்பெனிகளும் இருக்கின்றன. ஆகையால் நம் மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் வேலைக்காக அங்கே வந்து குடியேறி யிருக்கிருர்கள். நமது மாகாணத்தில் பலவிதத் திலும் சிறந்து விளங்குவது சென்னை நகரமே. பிள்ளைகளே! நீங்கள் பெரியவர்களானஃபின் இவ் வளவு சிறந்த நகரத்தைச் சென்று பாருங்கள்.

## 21. புதையல்

பூமியின் கீழே இருந்து அகப்படும் பொருள் களுக்குப் புதையல் என்று பெயர். இவ்வாறு அகப்படுபவைகள், பணம், உலோகங்கள், விலை உயர்ந்த கற்கள், இறந்த பிராணிகளின் எலும்பு கள், நிலக்கரி, கிரோசின் ஆயில் என்னும் மண் ணெண்ணெய் முதலிவைகளே. இவைகளில் உலோகங்களைப்பற்றிக் கீழே சொல்லுவோம்.

தங்கம், வெள்ளி, பித்தளை, செப்பு, இரும்பு, ஈயம், தகரம் ஆகிய இவைகள் முக்கியமான உலோகங்கள். உலோகங்களைப் பூமியிலிருந்து வெட்டி யெடுத்து பிறகு அவைகளைச் சுத்தம் செய்து உபயோகப்படுத்துவார்கள்.

தங்கம் மஞ்சள் நிறமானது. இது உறுதி யும் கனமும், பிரகாசமும் உள்ளது; இது மிகவும் கொஞ்சமாகக் கிடைப்பதால் இதன் விலை அதிகம்.

உலோகங்களில் இதுவே மேலானது. இதில் களிம்பு ஏருது. தங்கத்தால் காப்பு, கொலுசு, சங்கிலி, மோதிரம் முதலிய பலவித நகைகள் செய்வார்கள்.

தங்கத்துக்கு அடுத்தபடியாகச் சிறந்தது வெள்ளி. இது வெண்மை நிறமானது. பிரகாசமும் உள்ளது. இதிலும் களிம்பு ஏருது. வெள்ளியால் பாத்திரங்களும், காப்பு, கொலுசு, அரைஞாண் முதலியவைகளும் செய்வார்கள். தங்கத்திலும், வெள்ளியிலும் நகைகள் முதலியவை செய்பவருக்குத் தட்டார் என்று பெயர்.

செம்பு அல்லது தாமிரம் சிவந்த நிறமுள்ள ஒரு உலோகம். செம்பினுல் பலவிதப் பாத்திரங்கள் செய்வார்கள். தங்கம், வெள்ளி, செம்பு இவைகளில் செய்த நாணயங்கள் நமது நாட்டில் வழங்கி வருகின்றன.

பித்தளை வெளுத்த மஞ்சள் நிறமாயிருக்கும். இதுவும் கொஞ்சம் பிரகாசமுள்ளது. ஆனுல் தங்கத்தைப்போல் அவ்வளவு பிரகாசமுள்ளதல்ல. பித்தளையில் பாத்திரங்கள் செய்வார்கள். செம்பு, பித்தளைப் பாத்திரங்களில் சீக்கிரம் களிம்பு ஏறும். களிம்பு, பச்சை நிறமாய் இருக்கும். இப் பாத்திரங்களில் களிம்பு ஏறுவதால் இவைகளில் வைக்கப்படும் புளிப்புப் பதார்த்தங்கள் சீக்கிரம் கெட்டுப்

போகும். இப் பாத்திரங்களின் உள்ளே ஈயத்தைப் பூசி உபயோகப்படுத்திஞல் களிம்பு ஏருது. பதார்த்தங்களும் கெட்டுப் போகா. செம்பு, பித்தளைப் பாத்திரங்கள் செய்பவருக்குக் கன்ஞர் என்று பெயர்.

இரும்பு வெள்ளை நிறமானது. ஆஞல் அது வெள்ளியைப்போல் அவ்வளவு வெண்மையான தல்ல. நாம் இரும்பைப் பார்க்கும்போது அது கறுப்பாக இருக்கிறது. ஏன்? இரும்பில் சீக்கிரம் துருப்பிடிக்கும். அப்பொழுது இரும்பு கறுப்பு நிறமாகக் காணப்படும். இரும்பு மிகவும் உறுதியான உலோகம். இது அதிகமாய் அகப்படக்கூடியது. ஆகையால் இதன் விலை அதிகமல்ல. இரும்பிஞல் பலவித இயந்திரங்களும், கத்தி முதலிய சிறு கருவிகளும் பலவித ஆயுதங்களும் செய்யப்படுகின்றன. இரும்பு நமக்கு மிகவும் உபயோகமுள்ளது. இரும்பு வேலை செய்பவருக்குக் கொல்லர் என்று பெயர்.

ஈயம் வெள்ளை நிறமுள்ளது; எளிதில் வளையக்கூடியது. சீக்கிரம் உருகக்கூடியது. ஈயத்திஞல் பாத்திரங்களும், துப்பாக்கிக் குண்டுகளும், அச்சு எழுத்துக்களும் செய்கிருர்கள்.

தகரம் என்னும் உலோகம் தனியாய் உபயோகப்படுகிறதில்லை. வெண்கலம் செய்வதற்குத் தகரத்தைச் சேர்ப்பார்கள்.

## 22. குரங்கும் ஆடும்

பிள்ளைகளே! நீங்கள் குரங்கைப் பார்த்திருக்கிறீர்களா? அது மனிதனைப்போல் இருக்கிற



தல்லவா? ஆனால் குரங்கு மனிதனைப்போல் பேசாது. இதற்கு வால் ஒன்று உண்டு. குரங்கு மிகவும் குறும்புத்தனம் உள்ளது. அது மரத்திற்கு மரம் தாவும். குரங்கின் குறும்புத்தனத்தைப்பற்றி ஒரு கதை கூறுகிறேன் கேளுங்கள்.

ராமன் என்ற ஒருவன் குரங்கு ஒன்றை வளர்த்து வந்தான். அது மிகவும் குறும்புத்

தனம் உள்ளது. அவன் ஒருநாள் ஒரு காரியமாக அயலூருக்குச் சென்றுன். செல்லும்போது தன் குரங்கையும் கூட்டிக்கொண்டு, கட்டுச்சோறு எடுத்துக்கொண்டு சென்றுன்.

போகும் வழியில் அவனுக்குப் பசி எடுத்தது. அதனுல் அவன் ஒரு குளக்கரையில் கட்டுச் சோற்றை வைத்துவிட்டு, குளத்தில் பல் துலக்கச் சென்றுன். அப்பொழுது அந்த துஷ்டக் குரங்கு கட்டுச் சோறு முழுவதையும் தின்றுவிட்டு சமீபத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஓர் ஆட்டின் வாயில் கையைத் துடைத்துவிட்டு, ஒன்றும் தெரியாதது போல மரத்தில் ஏறிக்கொண்டது.

சிறிது நேரம் சென்றதும் ராமன் பல் துலக்கிவிட்டுக் கரை ஏறிக் கட்டுச் சோற்றைக் காணுதவனுய்ச் சுற்றும்முற்றும் பார்த்தான். சோறு அப்பிய வாயுடன் இருந்த ஆட்டைக் கண்டான். உடனே ஆடுதான் சோற்றைத் தின்றுவிட்டது என்று எண்ணி, முன்பின் யோசியாது, ஆட்டை மரத்தில் கட்டித் தடியினுல் அடித்துக் கொன்றுன். குற்றம் செய்த குரங்கு தப்பியது. குரங்கின் குறும்புத்தனத்தால் வந்த கேட்டைப் பாருங்கள்.

இந்த மாதிரியே துஷ்டர்கள் ஒரு கெட்ட காரியத்தைச் செய்து, தண்டனையிலிருந்து தாம்

தப்புமாறு குற்றவாளி அல்லாதவர்களைக் குற்ற வாளி ஆக்கிவிடுகிருர்கள். ஆகையால், துஷ்டர் களைக் கண்டால் தூர விலகவேண்டும்.

---

## 23. அம்மை குத்துவது ஏன்?

தகப்பனுர்:—குழந்தாய்! நீ ஏன் ஓடி வரு கிருய்? இப்பொழுதுதானே பள்ளிக்கூடம் போனுய். அதற்குள் ஏன் திரும்பி விட்டாய்?



ராமன்:—அப்பா! எங்கள் பள்ளிக்கூடம் நமது கிராமச் சாவடியில்தானே இருக்கிறது. அங்கே அம்மை குத்துகிறவர் வந்திருக்கிருர். அதனுல்தான் ஓடிவந்துவிட்டேன்.

தகப்:—குழந்தாய்! இதற்காகவா பயந்து ஓடி வந்தாய்? உனக்குத்தான் குழந்தையாயிருக்கும்போதே ஒரு தடவையும், போனவருஷத்தில் ஒருதடவையும் அம்மை குத்தியாய்விட்டதே.

ராமன்:—அப்பா! நான் பயந்து ஓடி வரவில்லை. நமது வீட்டில் குழந்தை இருக்கிறதே. அதற்கும் அம்மை குத்தி விடுவார்களே என்று பயந்து, உங்களிடம் சொல்லிக் குழந்தையை ஒளித்து வைப்பதற்காக வந்தேன்.

தகப்:—குழந்தாய்! இப்பொழுது அம்மை குத்துகிறவரிடமிருந்து குழந்தையை ஒளிக்கலாம். பின்னல் வைசூரி வராமல் குழந்தையை ஒளித்து வைத்துக் காப்பாற்ற முடியுமா?

ராமன்:—அப்பா! வைசூரி என்ருல் என்ன? அதற்கும் அம்மை குத்துவதற்கும் என்ன சம்பந்தம்?

தகப்:—குழந்தாய்! வைசூரி அல்லது பெரிய அம்மை என்பது ஒரு கொடிய வியாதி. இவ்வியாதி முதலில் மூன்று நாட்களுக்கு விடாது ஜுரம் கண்டு, பின்பு அம்மை முத்துக்கள் தேகம் முழுவதும் காணும். இம் முத்துக்கள் நாளடைவில் பெரிதாகி வாடும். வாடியபின் முத்துக்கள் இருந்த இடங்களில் குழிவிழுந்து, தேகத்தின் அழகைக் கெடுத்துவிடும். சிலருக்குக் கண்

குருடாகிவிடும்; காது செவிடாகிவிடும்; அல்லது கால், கை நொண்டியாகிவிடும். ஆகையால் இதனிடத்தில் ஜனங்களுக்குப் பயம் அதிகம். வைசூரி வியாதி வராமலிருப்பதற்குத்தான் அம்மை குத்துகிருர்கள்.

ராமன்:—அம்மை குத்தும்போது பால் போல் வெள்ளையாக இருக்கும் ஒரு வஸ்துவைக் கையில் வைக்கிருர்களே, அது என்ன ?

தகப்:—குழந்தாய்! அதுதான் அம்மைப் பால். அது இல்லாமல் அம்மை குத்திஞல் பிரயோசனம் இல்லை. அம்மை கொப்பளித்துத் தழும்பு ஏறிஞல்தான் வைசூரி வராமல் தடுக்க நமது தேகத்தில் சக்தி உண்டாகும். அவ்வாறு கொப்பளிப்பதற்கு அம்மைப்பால் மிகவும் அவசியமானது.

ராமன்:—அம்மைப்பாலை எப்படித் தயார் செய்கிருர்கள் ?

தகப்:—குழந்தாய்! கன்றுக்குட்டியின் அடிவயிற்றில் அம்மைக் கொப்பளங்கள் உண்டாக்கி, அதிலிருந்து பாலை எடுத்து, கெடாமல் பத்திரப்படுத்தி, அயலூர்களுக்கு அனுப்புவார்கள். அம்மை குத்தும் முறையை முதலில் கண்டுபிடித்தவர் டாக்டர் ஜென்னர் துரை.

ராமன்:—அப்பா! அடுத்த வீட்டில் குழந்தைக்கு வைசூரி வார்த்திருந்த பொழுது, வாசவில் வேப்பிலை கட்டித் தொங்கவிட்டிருந்தார்களே, ஏன்?

தகப்:—குழந்தாய்! வைசூரி ஒரு தொத்து வியாதி. ஒருவரிடத்திலிருந்து மற்றவர்களுக்குப் பரவும். ஆகையால் வைசூரி கண்டவர்களிடம் எல்லோரும் செல்லக்கூடாது. அதற்காகவே வைசூரி அந்த வீட்டில் கண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக வேப்பிலைக்கொத்து தொங்க விடுகிருர்கள். அம்மை குத்திக் கொண்டவர்களே போகலாம். ஏனெனில் அம்மை குத்திக் கொண்டவர்களுக்கு வைசூரி வராது. அப்படி வந்தாலும் மிகவும் சுலபமாய்ப்போய்விடும். ஆகையால் அம்மை குத்திக்கொள்ள வேண்டியது அவசியம்

ராமன்:—நான் குழந்தையாய் இருக்கும் போது எனக்கு அம்மை குத்திஞர்களே! மறுபடியும் போன வருஷம் ஏன் அம்மை குத்திஞர்கள்?

தகப்:—குழந்தாய்! ஒவ்வொருவரும் ஏழு வருஷத்துக்கு ஒருதரம் அம்மை வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். சிறு குழந்தைக்கு ஆறு மாதம் ஆகு முன்னமே அம்மை

வைத்துவிட வேண்டும். ஆகையால் நமது குழந்தைக்கும் அம்மை வைத்து விடுவோம். வா போகலாம்.

---

## 24. பூமி, சூரியன், சந்திரன்

நாம் வசிக்கும் பூமி, பந்துபோல் உருண்டையாக இருக்கிறது. ஆனால் அது உருண்டையாய் இருப்பதை நாம் பார்க்கமுடியாது. பூமி மிகவும்




பெரிய பந்து. அதன்மேல் நாம் இருக்கிறோம். ஒரு பெரிய பந்தின்மேல் எறும்பு உட்கார்ந்தால், அந்த எறும்புக்கு அப்பந்தின் உருவம் தெரியுமா? அது போலவே நமக்கும் பூமியின் உருவம் தெரியாது.

சூரியன் காலையில் கிழக்கே உதிக்கிறது. மாலையில் மேற்கே மறைகிறது. ஆனல் நாம் நினைக்கிறபடி சூரியன் அசைகிறதில்லை. ஒரே இடத்தில் தான் இருக்கிறது. பூமி தன்னைத் தானே சுற்றிக்கொள்ளுகிறது. அதனல் தான் நமக்குச் சூரியன் சுற்றுவதாகத் தோன்றுகிறது. சூரியன் எதிரில் பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால், சூரியவெளிச்சம் இருக்கும் பாகத்தில் பகலாகவும், சூரிய வெளிச்சம் படாத பாகம் இரவாகவும் இருக்கிறது. அதனல் பூமியின் ஒரு பாகத்துக்குப் பகலும் இரவும் மாறிமாறி வருகிறது.

ஒரு பிரகாசமான விளக்கின் எதிரில் ஒரு பந்தை வைத்துப்பார். பந்தின் ஒரு பாதியில் வெளிச்சம் படும். மற்றப் பாதி இருட்டாய் இருக்கும். பின்பு அப்பந்தைச் சுற்றினல் ஒரே பாகத்திற்கு வெளிச்சமும், இருட்டும் மாறி மாறி வருவதைக் காணலாம். இதே மாதிரிதான் பூமிக்கும் பகலும் இரவும் மாறி மாறி வருகிறது.

பூமி தன்னைச் சுற்றிக் கொள்வதோடு, சூரியனையும் சுற்றுகிறது. அப்படி ஒரு தடவை சூரியனைப் பூமி சுற்றி வருவதற்கு $365\frac{1}{4}$ நாட்கள் ஆகின்றன. இதைத்தான் நாம் ஒரு வருஷம் என்கிறேம்.

இந்த மாதிரி சூரியனைச் சுற்றும் பூமியைச் சந்திரன் சுற்றுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டே சூரியனையும் சுற்றுகிறது. இவ்வாறு அது பூமியைச் சுற்றி வருவதற்கு சுமார் 29½ நாட்கள் ஆகின்றன. இதைத்தான் நாம் ஒரு மாதம் என்று சொல்லுகிறோம்.

சூரியனுடைய ஒளி என்றும் ஒரே விதமான பிரகாசமாய் இருக்கிறது. ஆனால் சந்திரனுடைய ஒளி அப்படியல்ல. சில சமயங்களில் குறைந்தும், சில சமயங்களில் வளர்ந்தும் வருகிறது. 15 நாட்கள் குறைந்தும், 15 நாட்கள் வளர்ந்தும் வருகிறது. குறையும் காலத்துக்குக் கிருஷ்ண பட்சம் அல்லது தேய்பிறை என்றும், அதன் கடைசி நாளுக்கு அமாவாசை என்றும் பெயர். வளரும் காலத்துக்குச் சுக்கில பட்சம் அல்லது வளர் பிறை என்றும் அதன் கடைசி நாளுக்குப் பௌர்ணிமை என்றும் பெயர். அமாவாசையன்று வெளிச்சமே இல்லாமல் இருட்டாயிருக்கும். பௌர்ணிமையன்று சந்திரன் தன் முழு அளவுடன் பிரகாசிக்கும். ஒரு பட்சம் பதினைந்து நாட்கள். இரண்டு பட்சம் ஒரு மாதம். பன்னிரண்டு மாதம் ஒரு வருஷம்.

சூரியன் ஒளியால் சுத்தம் ஏற்படும். சந்திரன் குளிர்ச்சியான ஒளி தரும். சூரிய

வெளிச்சம் இல்லாவிட்டால் உலகத்திலுள்ள எந்தப் பிராணியும் உயிருடன் இருக்கமுடியாது. சூரியனும் சந்திரனும் யாவர்க்கும் அவசியம் வேண்டியவை. சூரியனையும் சந்திரனையும் சிலர் தேவதைகளாக வணங்கி வருகிருர்கள்.

---

## 25. கடவுள் வணக்கம்

மதுரை நகரத்தில் ராமன், லட்சுமணன் என்ற இரண்டு சிநேகிதர்கள் இருந்தார்கள். அவர்களில் ராமனுக்குக் கடவுளை வணங்குவதில் பிரியம் அதிகம். கோவிலை எங்கு கண்டாலும் உள்ளே நுழைந்து கடவுளை வணங்காமல் செல்ல மாட்டான். கடவுளை வணங்குவதை மிகவும் முக்கியமாக அவன் செய்துவந்தான்.

ஆனல் லட்சுமணனுக்கோ கடவுள் என்ருல் வெறுப்பே. கடவுளின் பெயரை வாயால் சொல்லவும் மாட்டான். கடவுளை வணங்க நினைக்கவும் மாட்டான். இவனைக் கோவிலுக்குக் கூட்டிக் கொண்டுபோக ராமன் எவ்வளவோ முயற்சி செய்தான். அவனல் முடியவில்லை. ஆகையால் ராமன் லட்சுமணனிடம் கடவுளைப்பற்றிப் பேசுவதில்லை.

ராமனும் லட்சுமணனும் ஒரு நாள் அயலூருக்குச் செல்ல நேர்ந்தது. அவ்வாறே அவர்

கள் இருவரும் கட்டுச்சோறு எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். வழியில் ஒரு பெரிய காடு இருந்தது. அதன் வழியே அவர்கள் மிகுந்த கஷ்டத்துடன் சென்றனர். நடுக்காட்டில் ஒரு கோவில் இருந்தது. இருவரும் அதைக் கண்டனர்.

கண்டதும் ராமன் லட்சுமணனைப் பார்த்து, “லட்சுமணு! இதோ ஒரு கோவில் தெரிகிறது. நாம் வெயிலில்நடந்து களைப்படைந்திருக்கிறோம். ஆகையால் கோவிலுக்குள் சென்று கடவுளை வணங்கிவிட்டு, சிறிது நேரம் இளைப்பாறிச் செல்வோம் வா” என்றான். அதற்கு லட்சுமணன், “நான் கோவிலுக்குள் வரமாட்டேன் என்பது தெரிந்தும் நீ ஏன் என்னைத் தொந்திரவு செய்கிருய்? இம்மரத்தடியிலேயே நான் இருக்கிறேன். நீ கோவிலுக்குள் போய் வருவதை நான் தடுக்கவில்லை” என்றான்.

அவ்வாறே ராமன் கோவிலுக்குள் சென்றான். லட்சுமணன் வெளியிலிருந்த மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தான். கோவிலுக்குள் சென்ற ராமன், கடவுளை வணங்கிவிட்டு, சுற்றி வலம் வந்தான். அப்பொழுது ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தான். பலமான காயம்பட்டு, அதிலிருந்து இரத்தம் வெளியேறியது. மிகவும் கஷ்டத்துடன் எழுந்து வெளியே வந்தான்.

வெளியிலிருந்த லட்சுமணன் எதிரில், மரத்திலிருந்து ஒரு துணி முடிப்பு விழுந்தது. அவன் அதை அவிழ்த்துப் பார்க்கவே, அதில் பத்து ரூபாய்கள் இருந்தன. அதனுல் அவன் சந்தோஷமடைந்தான். இதற்குள் ராமன் காயத்துடன் வருவதைக் கண்டான். உடனே லட்சுமணன் சிரித்துக்கொண்டே, "என்ன ராமா! கோவிலுக்குள் போனதன் பலன் உனக்கு உடனே கிடைத்து விட்டாற்போலிருக்கிறதே! இதோ பார்! நான் கோவிலுக்குள் போகாமல் வெளியே இருந்ததற்கு வெகுமதி பத்து ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆகையால் நீ இனிமேல் கோவிலுக்கே போகாதே" என்று பரிகாசமாய்க் கூறினுன்.

இதைக் கேட்ட ராமன் மிகவும் வருந்திக் கடவுளை மறுபடியும் வணங்கி, "கடவுளே! உன்னை வணங்கும் எனக்கு இக்கதி வரலாமோ? உன்னை வணங்காதவருக்குத்தான் நன்மை உண்டாகுமோ? வணங்குபவருக்கு என்றும் கெடுதல் தானே?" என்று கூறி மனம் வருந்தி அழுதான். அப்போது கடவுள் அசரீரி வாக்கினுல் "அப்பா! ராமா! நீ வருத்தப்படாதே. இன்று நீ பாம்பு கடித்து இறக்கவேண்டியவன். என்னை வணங்கியதால் சிறு காயத்தோடு தப்பினுய்.

ஆனால் லட்சுமணனுக்கு இன்று விலை மதிக்க முடியாத பணப்புதையல் கிடைத்திருக்கும். என்னை வணங்காததால் பத்து ரூபாய்தான் கிடைத்தது. இதன் உண்மையை அறியாமல் ஏன் வீணாய் வருந்துகிறாய்? உன் உறுதியைக் கைவிடாதே'' என்று கூறினார்.

இதைக்கேட்ட ராமன் மிகவும் சந்தோஷமடைந்தான். அன்று முதல் லட்சுமணனும் கடவுளை வணங்கி வந்தான். ஆகையால் பிள்ளைகளே! கடவுளை வணங்குவதில் ஏற்படும் கஷ்டங்களைக் கண்டு, அதை விட்டு விடக்கூடாது. மிகவும் உறுதியான பக்தியுடன் கடவுளை வணங்க வேண்டும்.

## 26. போக்கு வரவு—I

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போவதும் வருவதும் போக்கு வரவு எனப்படும். ஜனப்போக்கு வரவு, சாமான்கள் போக்கு வரவு, கடிதப் போக்கு வரவு என்று பலவகை உண்டு. ஒரு ஊருக்கும் மற்றொரு ஊருக்கும் போக்கு வரவினால் சம்பந்தம் ஏற்படுகிறது.



முன் காலத்தில் ஜனங்கள் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு நடந்து சென்றார்கள். பணக்காரர்கள் மனிதர்களால் சுமக்கப்பட்ட பல்லக்கில் ஏறிச் சென்றார்கள். ஆனால் அதிகமான சாமான்களைக் கொண்டுபோக வேண்டியிருந்தால், காளைகள்மேல் பாரம் ஏற்றிக் கொண்டு போவார்கள். மலைச் சரிவுகளிலும், கணவாய்களிலும் குதிரைகள்மேலும் கழுதைகள்மேலும் பாரம் ஏற்றிக் கொண்டுபோவார்கள்.

பின் மாடுகளை வண்டியில் பூட்டி உபயோகித்து வந்தார்கள். ஒற்றை மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி என்ற இரண்டு வித வண்டிகள் உண்டு. மாடுகளைப் போலவே குதிரைகளையும் வண்டியில் பூட்டி உபயோகித்தார்கள். பணக்காரர்கள், ஒரு குதிரை அல்லது இரண்டு குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டியில் ஏறி வந்தார்கள்.



ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் வியாபாரம், பெரிய படகுகள் மூலமாகவும் கப்பல்கள் மூலமாகவும் முன் காலத்தில் நடை பெற்று வந்தது.

# 27. போக்கு வரவு—II

ஆனால் நாளடைவில் பலவித இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளின் உதவியால் பற்பல வண்டிகள் உபயோகத்துக்கு வந்தன. இப்போது அவைகளால் போக்கு வரவு நடைபெற்று வருகிறது.



படத்தில் காண்பது ஒரு சைக்கிள் வண்டி. இதற்கு இரண்டு சக்கரங்கள் தான் உண்டு. அதனால் இதைத் துவிச்சக்கர வண்டி என்றும் கூறுவார்கள். இவ்வண்டி நம் நாட்டில் அநேகரால் உபயோகிக்கப்படுகிறது.



இது புகைவண்டி. நீராவியின் சக்தியினால் இரும்புத் தண்டவாளங்களில் இது ஓடும். இதை ரயில் வண்டி என்றும் கூறுவதுண்டு. இதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா ?



நீராவியின் சக்தியால் கடலில் செல்லும் நீராவிக் கப்பல் இதுதான். இதில் வியாபாரக் கப்பல். யுத்தக் கப்பல் எனப் பலவித வகைகள் உண்டு.



இவை தவிர பெட்ரோல் என்னும் ஒரு வகை எண்ணெயின் உதவியால் ஓடும் வண்டிகளும் உண்டு. படத்தில் காண்பது ஒரு மோட்டார் வண்டி. இதற்கு நான்கு ரப்பர்ச் சக்கரங்கள் இருக்கின்றன. இது பெட்ரோல் என்னும் எண்ணெயின் உதவியால் தானுகவே ஓடுகிறது. இதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.



இது ஒரு மோட்டார் சைக்கிள். இதற்கு இரண்டு ரப்பர்ச் சக்கரங்கள்தான் உண்டு. இதுவும் பெட்ரோல் எண்ணெயின் உதவியால் ஓடும். இதில் ஒருவர்தான் ஏறிச் செல்லலாம்.

தரையில் செல்லும் இவைகள் தவிர, ஆகாயத்தில் பெட்ரோல் எண்ணெயின் உதவியால் பட்சிகள் போல் பறந்து செல்லுவதும்



ஏரோப்ளேன் என்பது. இதற்கு, பட்சிகளுக்கு இருப்பதுபோல் பெரிய இறக்கைகள் உண்டு. நீங்கள் இதை ஆகாயத்தில் செல்லும்போது பார்த்திருப்பீர்கள்.

மின்சார சக்தியால் ஓடும் வண்டிக்கு டிராம் வண்டி என்று பெயர். நமது மாகாணத்தின் தலைநகரமாகிய சென்னைப்பட்டணத்தில் இதைக் காணலாம். மின்சார சக்தியால் ஓடும் ரயில் வண்டி தற்போது ஏற்பட்டிருக்கிறது. இது வேகமாய்ச் செல்லக்கூடியது.

---

## 28. கிராமப் பஞ்சாயத்து

பிள்ளைகளே! நீங்கள் எல்லோரும் கிராமத்தைப் பார்த்திருப்பீர்கள். பொதுவான காரியங்களையும், ஜலவசதி விஷயங்களையும், சுகாதார விஷயங்களையும் கவனிக்காததனால், அநேக கிராமங்கள் மிகவும் சீர்கேடடைந்து விட்டன. இதையெல்லாம் நமது கவர்ன்மெண்டார் கவனித்து, கிராம விஷயங்களைக் கவனிப்பதற்காகவே கிராமப் பஞ்சாயத்தை அநேக கிராமங்களில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதற்காகவே 1920-ம் வருஷத்து கிராமப்

பஞ்சாயத்து ஆக்ட் என்ற சட்டம் ஏற்பட்டு இருக்கிறது.

கிராமப் பஞ்சாயத்து என்பது 7 முதல் 15 பேர்கள் அடங்கிய ஒரு சபை. இந்தச் சபையில் இருப்பவர்கள் அவ்வூரிலேயே குடியிருக்க வேண்டும். 25 வயதுக்கு மேற்பட்டவர்களா யிருக்கவேண்டும். சபையில் உள்ளவர்கள் தங் களுக்குள் ஒருவரைத் தலைவராக ஏற்படுத்திக் கொள்வார்கள். இச்சபையில் இருப்பவர்கள் பொது நலத்திற்குப் பாடுபடக்கூடியவர்களாக வும், உலக அனுபவமுள்ள அறிவாளிகளாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

இந்தக் கிராமப் பஞ்சாயத்தார் செய்ய வேண்டிய வேலைகள் பல. அவைகளெல்லாம், பல விதத்திலும் கிராமத்தைப் பாதுகாத்து, அதை முன்னுக்குக் கொண்டுவர வேண்டிய வேலைகளே.

பஞ்சாயத்தார் முக்கியமாகச் செய்யும் வேலைகள் பின் வருமாறு:—

கிராம அமைப்பு சம்பந்தமாகக் கவனித்துக் கிராமத்தை ஒழுங்காய் அமைத்தல்; கிராமத்தில் சரியான பாதைகள் போடுதல்; பழைய கட்டிடங்களைப் பாதுகாத்தல்; புதிய கட்டிடங்

களை ஒழுங்காய் அமைத்தல்; விளக்குப் போடுதல்; பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துதல்; பொது ஜனங்கள் படிப்பதற்குப் புத்தகசாலைகள் அமைத்தல்; கிராமத்தில் விழும் குப்பை கூளங்களையும், சப்பாத்துக் கள்ளிகளையும் அப்புறப்படுத்துதல்; குடி தண்ணீருக்கு வேண்டிய கிணறுகளையும், குளங்களையும், சுத்தப்படுத்துதல்; ஜனங்களின் சுகாதாரத்துக்கு வேண்டிய காரியங்களைச் செய்தல்; கக்கூசுகள் கட்டுதல்; நிலங்களுக்கு வேண்டிய நீர்ப்பாசனங்கள் ஏற்படுத்தல்; வைத்திய சாலை அமைத்தல்; நூல் நூற்றல், துணி நெய்தல் முதலிய பல தொழில்களையும் விருத்தி செய்தல்; இவ்வேலைகளுக்கு வேண்டிய பணம் வசூல் செய்து, அதன் கணக்கு வழக்குப் பார்த்தல்; மாதந்தோறும் கூட்டம் கூடி, செய்த வேலைகளையும் செய்யவேண்டிய வேலைகளையும் பற்றி ஆலோசித்தல் முதலியனவாம்.

கிராமப் பஞ்சாயத்தினால் ஒவ்வொரு கிராமத்திற்கும் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

## 29. கடிதம் எழுதும் முறை

கடிதம் எழுதும் முறையில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம், விலாசம், ஊர், தபாலாபீஸ், ஜில்லா முதலியவைகள் சரியாகவும் தப்பிதமில்லாமலும் எழுதப்படவேண்டும். சிறு தவறுதலால் பல கஷ்டங்களும் பெரிய நஷ்டங்களும் ஏற்படும். எழுதிய கடிதத்தைத் திருப்பி ஒரு தரம் படித்துப் பார்த்த பின், உறையில் போடவேண்டும். உறையின் மேல் எழுதப்பட்ட விலாசம் உள்ளவருக்குத் தானா அக்கடிதம் என்று சரிபார்த்த பின்தான் எழுதப்பட்ட கடிதத்தை உறையில் வைக்கவேண்டும். கடிதத்துடன் ரூபாய் நோட்டுகள் வைத்து அனுப்புவது குற்றமாகும்.

(1. பெரியோருக்கு)

22, மேலமாசி வீதி, மதுரை.

**10உ ஏப்ரல் மீ 1946ஞு**

க்ஷேமம்.

அன்புள்ள மாமா அவர்களுக்குத் தங்கள் மருமகன் சுப்பிரமணியன் அநேக நமஸ்காரம். இங்கு எல்லோரும் சுகமாய் இருக்கிறோம். அவ்விடத்தில் எல்லோருடைய க்ஷேமத்தையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

நான் தினந்தோறும் தவருமல் பள்ளிக் கூடம் போகிறேன். பாடம் நன்ருய்ப் படிக்கிறேன். எங்கள் உபாத்தியாயர் அன்போடு பாடம் கற்பிக்கிருர். இந்த வருஷம் பரீட்சையில் நன்ருய் எழுதியிருக்கிறேன். பரீட்சையில் நான் தேறிவிடுவேன்.

இவ்வூரில் இம்மாதக் கடைசியில் நடக்கும் சித்திரைத் திருவிழாவிற்குத் தாங்கள் அவசியம் வரவேண்டும். வரும்போது மாமி, குழந்தைகள் முதலியவர்களையும் கட்டாயம் கூட்டிக்கொண்டு வரவேண்டும்.

எல்லோருக்கும் என் நமஸ்காரத்தைச் சொல்லவும்.

இங்ஙனம் :
தங்கள் அன்புள்ள,
சுப்பிரமணியன்

விலாசம்:—

மகா-ா-ா-ஸ்ரீ
வி. நடேச முதலியார்,
முனிசிபல் கௌன்சிலர்,
பொள்ளாச்சி.

(2. சிறியோருக்கு)

போள்ளாச்சி,
15உ எப்ரல்மீ 1946ஹு

க்ஷேமம்.

சிரஞ்சீவி சுப்பிரமணியனுக்கு அநேக ஆசீர்வாதம். இவ்விடத்தில் யாவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமத்தை அறிய மிகவும் சந்தோஷம்.

உன்னுடைய கடிதம் கிடைத்தது. நீ தவருமல் பள்ளிக்கூடம் போய் நன்ருய்ப் படிப்பதை அறிந்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். உன்னுடைய பாட்டியார் உன்னைப் பார்க்க ஆசைப்படுகிருர்கள். நாங்கள் எல்லோரும் திருவிழாவுக்கு அவசியம் வருகிருேம். வரும்போது உனக்கு ஒரு புதிய சட்டை தைத்துக்கொண்டு வருகிறேன்.

உன் தாயார் தகப்பனுர்களிடம் நாங்கள் வரும் விஷயத்தைச் சொல்லவும். மற்றவை நேரில்.

உன் அன்புள்ள,
நடேச முதலியார்

விலாசம்:—

சிரஞ்சீவி
சுப்பிரமணியன்,
22, மேலமாசி வீதி,
மதுரை.

## 30. உபகாரம் வீண் போகாது

காவனூர் என்ற கிராமத்தில் கோபாலன் என்ற பையன் இருந்தான். அவன் பிராணி களிடத்தில் இரக்கமும் அன்பும் உள்ளவன். ஒருநாள் அவன் அய லூருக்குப் போகநேர்ந்தது. ஆகையால் கட்டுச் சோறு எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

வழியில் அவன் ஒரு காட்டைக் கடக்க வேண்டியிருந்தது. அவன் காட்டின் வழியாய்ச் செல்லும்போது, சேறு நிறைந்த ஒரு குட்டையில் குருடன் ஒருவன் விழுந்து தத்தளிப்பதைக் கண்டான். அக் குருடன், கோபாலன் போவதைச் சத்தத்தால் அறிந்து,

(முத்தி நெறி அறியாத என்ற சந்தம்)

கண்ணில்லாக் குருடன் ஐயா !
கதியில்லாமல் விழுந்துவிட்டேன்.
புண்ணிய வானே நீரு மெனைப்
பொறுமையுடனே எடுத்துவிடும்.

"ஐயா! நான் ஒரு குருடன். வழி தெரியாமல் இச்சேறு நிறைந்த குட்டையில் விழுந்துவிட்டேன். தயவுசெய்து என்னை இதிலிருந்து கரையேற்றி, பாதையில் விட்டுவிடும்" என்று வேண்டினான்.

அதைக் கேட்ட கோபாலன்,

கண்ணரியமுள்ள பெரியவரே !
கருத்துடனே உமை விடுவிப்பேன்
எண்ணியபடியே இல்லாமல்
ஐயா யானொரு சிறு பயலே.

"பெரியவரே! இதோ உம்மைக் கரையேற்றி விடுகிறேன்; ஆனால் நீர் எண்ணியபடி நான் பெரிய மனிதனல்ல. சிறு பையன். அடுத்த கிராமத்திற்குச் சென்று, இருட்டுவதற்கு முன் திரும்ப வேண்டும்" என்று கூறிக் குருடனைக் கரையேற்றி, நல்ல பாதையில் விட்டுச் சென்றான்.

செல்லும்போது பாதையின் அருகே மயக்கமாய் விழுந்து கிடக்கும் நொண்டி ஒருவனைக் கண்டான்.

அந்நொண்டி பையனைக் கண்டதும்,

எட்டு நாளாய் உணவில்லாமல்
ஏக்கமுடனே மயங்குகிறேன்,
கட்டுச் சோற்றில் சிறிதளித்துக
காதசிடுவாபோ பையா நீ.

"பையா! எட்டு நாளாய் உணவில்லாமல் இவ்விடத்திலேயே கிடக்கின்றேன். தயவு செய்து உனது கட்டுச் சோற்றில் சிறிது கொடுத்து என்னைக் காப்பாற்று" என்று கெஞ்சினான்.

இதைக் கேட்ட கோபாலன்,

திட்டமுடன இச்சோற்றினையே
தினறுபசியைத் தீர்ததுக் கொள்ளும்

கஷ்டத்துடனே ஊர்சென்று
கருத்துடன் திரும்புவேன் விரைவாக.

"ஐயா! இக்கட்டுச் சோற்றை நீர் சாப்பிடும். நான் அயலூர் சென்று, சீக்கிரம் இருட்டுமுன் திரும்ப வேண்டும்," என்று கூறிக் கட்டுச் சோற்றைக் கொடுத்துச் சென்றான்.

ஆனால் அவன் திரும்பி வரும்பொழுது நடுக் காட்டில் பொழுது இருட்டி விட்டது. இரண்டு திருடர்கள் அவனை மடக்கிக்கொண்டார்கள். கோபாலன் உடனே, "திருடர், திருடர்" என்று கத்தினான். அப்பொழுது,

வாருங்கள் வாருங்கள் சீக்கிரமே
வந்திதோ இருக்கிற திருடர்களைப்
பாருங்கள் பிடியுங்கள் கட்டுங்கள்
பாவத்தொழில் செய்யும் கள்வர்களை.

"வாருங்கள் வாருங்கள் சீக்கிரம் இதோ இருக்கும் திருடர்களைப் பிடியுங்கள்; கட்டுங்கள்; அடியுங்கள்" என்ற சத்தம் கேட்டது. இதைக் கேட்ட திருடர்கள் ஓடிவிட்டனர். முன்பு கோபாலன் உபகாரம் செய்த நொண்டி, குருடன் மேல் ஏறிக்கொண்டு, இருவரும் சத்தமிட்டுக் கொண்டே வந்தார்கள். அவர்களைக் கண்டதும் கோபாலன்,

ஐயன்மீர்! உங்கள் உதவியினால்
ஆபத்திலிருந்து தப்பிவிட்டேன்,

மெய்யாகவே நீங்கள் வாராவிடில்
மேன்மேலும் ஏதேது செய்வார்களோ.

"ஐயன்மீர்! நீங்கள் சமயத்தில் வந்தீர்கள். இல்லாவிட்டால் அத்திருடர்கள் என்னை அடித்துக் கஷ்டப்படுத்தி யிருப்பார்கள். உங்களுக்கு மிகவும் வந்தனம்" என்று கூறினான்.

அதற்குள் அவர்கள்,

பையனே உன் ஆபத்தினை
பார்த்துமே நாங்கள் ஓடிவந்தோம்,
செய்யும் உபகாரம் ஒருநாளும்
சேதமாகாது தேர்ந்துகோள்வாய்.

"பையா! உன் குரலைக் கேட்டு, உன் ஆபத்தை அறிந்து சத்தமிட்டுக்கொண்டே ஓடிவந்தோம். அதனால் திருடர்கள் ஓடிவிட்டனர். நீ இன்று எங்களுக்கு உபகாரம் செய்ததனால் உன் குரலைத் தெரிந்துகொண்டோம். இல்லாவிடில் யாரோ என்று பேசாமல் இருந்திருப்போம். ஆகையால் ஒருவருக்கு உபகாரம் செய்தால் அது என்றும் வீண் போகாது" என்று கூறிச் சென்றனர். கோபாலனும் சௌக்கியமாய் வீடு சேர்ந்தான்.

# 31. படப் பழக்கம்—I

## காக்கையின் தந்திரம்



1

2

3

4

# 32. படப் பழக்கம்—II

## நாயின் நல்லறிவு



1

2

3

4

5

## 33. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
கிட்டா தாயின் வெட்டென மற.

கீழோர் ஆயினுந் தாழ உரை.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.

சூதும் வாதும் வேதனை செய்யும்.
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.

தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
திரைகட லோடியுந் திரவியந் தேடு.
தெய்வஞ் சீறின் கைதவம் மாளும்.

தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு.
மாரி அல்லது காரியம் இல்லை.
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
வீரன் கேண்மை கூர் அம்பாகும்.
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
கோள் செவிக்குறளை காற்றுடன் நெருப்பு.

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தீராக் கோபம் போராய் முடியும்.
தோழனோடும் ஏழமை பேசேல்.
நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்.
நீரகம் பொருந்திய ஊரகத் திரு.

நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை.
நைபவ ரெனினும் நொய்ய உரையேல்.

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பாலோ டாயினும் காலம் அறிந்துண்.
புலையும் கொலையும் களவும் தவிர்.

பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோடுண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.
வையந் தோறும் தெய்வம் தொழு.

ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
136339

பிரசுரகர்த்தர்:

வி. சூ. சுவாமிநாதன்

மதுரை :: திருநெல்வேலி

பதிப்புரிமை]

[விலை 0-5-3